இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

University of ... Lanka
RECEIVED
1-30
Periodicals Division
Library


# தொழிலாளர் பாதை

2/-

● மாதமிரு இதழ் — 413 ● 1991 நவம்பர் 18 திங்கட்கிழமை


## தோழர். ஆர். ஏ. பிட்டவெல நினைவு நீடூழி வாழ்க!

1988 நவம்பர் 12ல் பாசிச ஜே. வி. பி. இயக்கத்தினரால் கொலையுண்ட தோழர். ஆர். ஏ. பிட்டவெலவுக்கு மூன்றாண்டு பூர்த்தியாகும் இவ்வேளையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொழிலாளர் பாதையும் புரட்சிகர அஞ்சலி செலுத்துகின்றன. இலங்கை ஆசிரியர் சங்கத்தினுள்ளும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையேயும் அனைத்துலகவாதத்தின் அடிப்படையிலான, உலகப் புரட்சிக் கட்சியை கட்டி எழுப்ப அவர் நடாத்திய போராட்டம் சிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றது, நவம்பர் 16 — 17ம் திகதிகளில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு பேர்ளின் நகரில் கூட்டிய உலகத் தொழிலாளர் மகாநாடு தோழர். பிட்டவெலவினதும் போராட்டத்தில் உயிர்ப் பலியான தோழர்களதும் நினைவுக்கு ஒரு வரலாற்றுச் சின்னமாகஅமையும். தோழர் ஆர். ஏ, பிட்டவெல நினைவு நீடூழி வாழ்கவென நாம் வாழ்த்துகின்றோம்.

# இனவாத யுத்தத்திற்கும் கிராமப்புற பயங்கரங்களுக்கும் தொழிலாள வர்க்கம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்!

பிரேமதாச அரசாங்கம் வடக்கு—கிழக்கில் தமிழ் ஒடுக்கப்படுவோரை அழித்துவிடும் பொருட்டு தீவிரப்படுத்தியுள்ள யுத்தத்தையும், தெற்கில் கிராமப்புற வறியவர்களை அழிக்கச் செய்யும் இளைஞர் கொலைகளையும் வன்மையாகக் கண்டிக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், இந்த இனவாத யுத்தத்தையும் கிராமப்புற படுகொலைகளையும் நிறுத்தத் தொழிலாள வர்க்கம் தனது கைத்தொழில், அரசியல் சக்தியை அணிதிரட்ட வேண்டுமெனக் கோருகின்றது.

யூ. என். பி. அரசாங்கமும் சி. ல. சு. கட்சி உட்பட்ட முதலாளித்துவ கட்சிகளும் யூ. என். பி.யின் போராளிகள் என பெயரிடப்பட்டுள்ள கன்னையும், முதலாளித்துவ பத்திரிகைகள் கும்பலும் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ இ, தொ. கா. தலைமைகளது ஆதரவுடன் தூண்டிவிட்டுள்ள தமிழ் விரோத கூச்சலின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் இனச்சங்காரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கிராமப்புற படுகொலைகள் பற்றிய செய்தி வெலிமடை திக்கபிட்டி கிராமத்திலிருந்து புதிதாகக் கிடைத்துள்ளது.

வடக்கு-கிழக்கில் நடக்கும் கொடூர யுத்தம், பிரேமதாச அரசாங்கம் தீவெங்கும்தொழிலாள - ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துள்ள யுத்த இயக்கத்தின் இனவாத யுத்த முன்னணியே. யுத்தத்தின் இலக்கு, தமிழ் — சிங்கள இரு இனத்தை சார்ந்த தொழிலாள, ஒடுக்கப்பட்டவர்களை இரத்தக்களரியில் ஆழ்த்துவதும் ஏகாதிபத்தியத்தின் காலனித்துவச் சுரண்டலை நிலைநாட்டும் இராணுவ—பொலிஸ் சர்வாதிகாரத்தை திணிப்பதுமே.

★ ஒக்டோபர் 14ம் திகதியிலிருந்து யாழ்நகரை கைப்பற்றும் யுத்தம் ஆரம்பமாகியதாக அரசாங்கப் படைகள் தெரிவித்தன. இது 1990 யூன் மாதத்தில் பிரேமதாச அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் தலைமைக்கும் இடையிலான சமரசப் பேச்சுவார்த்தை பொறிந்து வீழ்ந்ததைத் தொடர்ந்து ஆரம்பமான மக்கட்கொலை யுத்த இயக்கத்தின் புதிய கட்டமாகும். ''வலம்புரி முற்றுகை'' என்ற பெயரில் தொடுக்கப்பட்ட இந்த மக்கட்கொலை நாசகார இயக்கத்தின் இனப்படுகொலை பற்றிய செய்திகளை வெளியிடுவதை, முதலாளித்துவ அரசாங்கமும், 'இராணுவமும், உள்நாட்டு வெளிநாட்டு முதலாளித்துவ பத்திரிகை கும்பலும் வேண்டுமென்றே தடைசெய்துள்ளன.

விமானமூலம் நடாத்தப்பட்ட தொடர்ச்சியான தாக்குதல்கள் — குண்டுமாரியினால் யாழ்ப்பாண நகர கட்டிடங்களில் பெருமளவு தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. கொல்லப்பட்ட காயமடைந்தவர்களது எண்ணிக்கை விபரங்கள் இன்னமும் மர்மமாக உள்ளது, அத்தோடு பெருவாரியான மக்கள் அழிவுக்கு உட்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. யாழ்நகரம் மட்டுமல்ல சாவகச்சேரி,மானிப்பாய்,பருத்தித்துறை,வல்வெட்டித்துறை ஆகிய நகரங்களும், அவற்றின் பகுதிகளும் குண்டு வீச்சுக்கு இலக்காகியுள்ளன. கோவில்,தேவாலயங்கள் தப்பி ஓடும் மக்களால் நிரம்பி வ்ளிகின்றன. ஊர்காவற்துறை, புங்குடுதீவு, மண்டைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகியவையும் பிரதான போக்குவரத்து மார்க்கமான பூநகரி-சங்குப்பிட்டி ஆகியவையும் இராணுவத்தால் மீளக்கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பலமாதங்களாக மூடப்பட்டிருந்தநொச்சிமுனைப்பாதை லொறி, சைக்கிள் போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டாலும் முழு யாழ்குடாநாட்டு அத்தியாவசிய போக்குவரத்து வசதிகள் இன்னமும் மக்கள் செல்ல முடியாமல் சீல் வைக்கப்பட்ட நிலைமையிலேயே உள்ளது.

பிரேமதாச அரசாங்கப் படைகள், குடாநாட்டிற்குள் தற்காலிகமாக தாக்குதலை நிறுத்தியுள்ளதாகஒக்டோபர் 2ம் திகதி அறிவித்தது. இருப்பினும் தமிழ் விடுதலை போராளிகள், சாதாரண ஒடுக்கப்பட்ட மக்கள் என்போரின் எதிர்ப்புக்கு மத்தியில் இளைப்பாறி விட்டு, மீண்டுமொரு இரத்தக் களரியை சிருஷ்டிக்கும் ''போர்நிறுத்தமே'' இது. இதற்கிடையில் வவுனியாவில் இடையறாத மக்கட் கொலை இடம்பெற்று வருகிறது. வவுனியாவில் துப்பாக்கிமுனையில் சிவில் நிர்வாகம் பற்றி பிரேமதாச அரசாங்கம் அறிவித்துள்ளது,


பட்டினிக்கும், அரைப்பட்டினிக்கும், நோய்களுக்கும் இலக்காகியுள்ள யாழ்குடாநாட்டு மக்களை மேன்மேலும் கொடூரமானமுறையில்நசுக்கிவிட அத்தியாவசிய தேவைகளை மேலும் வெட்டிசாய்க்கும் இராணுவத் தலையீடு இடம்பெற்றுள்ளது, சில தினங்களுக்கு முன் பருத்தித்துறையில்உணவுப்பொருட்களைகப்பலிலிருந்துஇறக்கிக்கொண்டிருந்த தொழிலாளர் மீது அசிட் பீப்பா வீசியதால் அவர்கள் படுகாயமுற்றனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கண்காணிப்பில் உள்ள அரசாங்க உணவுக் களஞ்சியத்திற்கும் குண்டுவீச்சு நடத்தப்பட்டுள்ளது.

★ தீவின் தென்பகுதியில் கிராமப்புறப் படுகொலைகள் தீவிரமடைந்துள்ளன. இந்த இயக்கத்தின் ஓரம்சமாக அக்டோபர் 8ம் திகதி வெலிமடை திக்கபிட்டியில் மூன்று இளைஞர்கள் பொலிஸ் கொலைக் கும்பலினால் கடத்திச் செல்லப்பட்டு, கொன்று எரிக்கப்பட்டுள்ளனர். கடந்த கால அரச பயங்கரவாத காலகட்டத்தில் தெல்வளை இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்ட புஞ்சிபண்டா மனதுங்க, தர்மரத்ன வீரதுங்க, சந்திரசிரி ராமகருணா என்ற மூன்று இளைஞர்களும் ''குற்றச்சாட்டு நிரூபணமில்லை'' என்று விடுதலை செய்யப்பட்டனர். 8ம் திகதி இரவு அவர்களை கடத்திச்சென்று ரஹங்கல—ஒஹிய ரயில் நிலையத்துக்கருகில் பற்றைகாட்டுக்குள் சுட்டுக்கொன்று, எரித்துள்ளனர். அன்றிரவு மற்றுமோர் இளைஞரை கடத்திச் செல்ல எடுத்த முயற்சி இக்கொலைகாரர் இருவரை அவ்வீட்டுப்பெண் தாக்கியதால் அம்முயற்சியை கைவிட்டு கொலைகாரர்கள் ஓடியுள்ளனர். ''ஜனதா விமுக்தி பெரமுனை'' மீண்டும் தலைதூக்கியுள்ளதாக பிரச்சாரம் செய்து, வீடுகளுக்குள் பாய்ச்சல் நடத்தி இளைஞரை கைது செய்தல், கொலை செய்தல் என்பன நடைபெறுவதாக தென் பகுதிகளிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

### காலனித்துவ ஆட்சியை நிறுவுதல்

தமிழ் ஒடுக்கப்படுவோரின் கொடிய ''பயங்கரவாதத்தை''அடக்கி''தாயகத்தை'' பேணப்போகும் முதலாளித்துவ பிற்போக்காளர்து சிங்கள, இனவாத கூச்சலின் பின்னணியில் உள்ள நிச தேவையை கிராமப்புறங்களில் நிகழும் இந்த மக்கட்கொலைகளிலிருந்து எந்தவொரு தொழிலாளியும் ஒடுக்கப்படுவோரும் விளங்கிக் கொள்ளலாம். அது மீண்டும் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. அது என்னவெனில், இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்துள்ள தமிழ் ஒடுக்கப்படுவோரையும் லட்சக்கணக்கில் இளைஞரை கொலை செய்வதன் மூலம் வறுமையினால் வாடும் விவசாயிகளையும் அழித்து ஒழித்துவிட்டு, எதிர்ப்பை அணிதிரட்டும் தொழிலாள வர்க்கின் மீது பாய்ச்சல் நடத்தி, நசுக்குவதே. இதன் மூலம் உலகவங்கி, சர்வதேச நாணய நிதி என்பவற்றின் நிபந்தனைப் பிரகாரம் ஏகாதிபத்தியவாதிகளது காலனித்துவ அடிமைச் சுரண்டலுக்கான சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டுவதே திட்டம். அரசாங்க சட்டப்பிர

(09-ம் பக்ம் பார்க்க)



பேர்ளின் உலக தொழிலாளர் மகாநாட்டிற்கு முன்னோடியாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அக்டோபர் 26ல் கொழும்பில் நடாத்திய மகாநாட்டுக்கு வருகை தந்த தொழிலாளர், இளைஞர்கள்.

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாட்ரிட் அனைத்துலக மகாநாடு:

# புஷ் விரும்பும் 'சமாதானம்' மத்திய கிழக்கு ஒடுக்கப்படுவோருக்கு எதிரானது

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையில் மாட்ரிட் நகரில் கூட்டப்பட்ட அனைத்துலகமகாநாடு, பல நூற்றாண்டுகளாக காலனித்துவ மேலாதிக்கத்தினாலும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையினாலு முண்டான தேசிய, சமூக, பொருளாதார முரண்பாடுகளால் நாசமாக்கப்பட்ட ஒரு பிராந்தியத்திற்கு சமாதானத்தை வழங்கப் போவதில்லை. புஷ் நிர்வாகமும், முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இம்மகாநாட்டினை 'சமாதானத்திற்கான ஒரு வரலாற்று சந்தர்ப்பம்' என வருணித்துக் கொள்கின்றன. என்ன மோசடி!

'சமாதானம்' என்ற வார்த்தை மூலம் ஜனாதிபதி புஷ்சும் அவர் பிரதிநிதித்துவம் செய்யும் அமெரிக்க முதலாளித்துவ வர்க்கமும் கருதுவது, ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ளபலஸ்தீனியர்கள் அரபுத் தொழிலாளர்கள் விவசாயிகள், இஸ்ரேலின் தொழிலாளர் கருதுவதில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. ஏகாதிபத்தியம் வெகுஜனங்களை, முதலாளித்துவச் சுரண்டலில் இருந்தும் தேசியப் பிளவுகளில் இருந்தும் விடுதலை செய்ப முயற்சிக்கவில்லை. சமாதானத்துக்கான நிச அடிப்படை அதுதான். மாறாக அது அப்பிராந்திய மக்களையும் வளங்களையும் உக்கிரமாகச் சுரண்ட முயற்சிக்கின்றது,

மத்திய கிழக்கின் முதலாளித்துவத் தலைவர்களை வாஷிங்டன் மிரட்டல்கள், லஞ்சங்கள் மூலம் இம்மகாநாட்டில் கூட்டியது. மாட்ரிட்டில் இடம்பெற்ற பகிரங்க பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இரகசிய இராஜதந்திர குளறுபடிகளும், திரைமறைவு பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றன. இவை எல்லாம் மத்திய கிழக்கு உழைக்கும் மக்களின் இழப்புக்களின் பேரிலேயே இடம் பெற்றன.



ஜோர்ஜ் புஷ்

இவற்றின் மூலம் என்ன தான் உடன்பாடுகள் ஏற்பட்டாலும் மத்திய கிழக்கு, யுத்தங்கள், புரட்சிகளின் வடிவில் முன்னொருபோதும் இல்லாத அளவிலான பாரிய வெடிப்புக்களுக்கு முகம் கொடுக்கும். இப்பிராந்தியத்தின் பிரச்சினைகள் அந்தளவுக்கு பரந்த வரலாற்றுப் பரிமாணத்தைக் கொண்டுள்ளதோடு பொருளாதார பேரழிவின் விழிம்பில் உள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் இவற்றினைத் தீர்த்து வைக்கும் நிலையில் இல்லை. இப்பிரச்சினைகள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, ஆசியாவில் கரைபுரண்டோடிய காலனித்துவத்துக்கு எதிரான வெகுஜன இயக்கத்தினை கருச்சிதையச் செய்வதிலேயே வேரூன்றியுள்ளன. இந்த இயக்கத்தினைச் சிரச்சேதம் செய்யும் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகள் தேசிய முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளுக்கு பெயரளவிலான அரசியல்அதிகாரத்தை கைமாற்றினர். உண்மையில் ஏகாதிபத்தியவாதிகளின் பொருளாதார நலன்கள் தொடர்ந்தும் தீண்டப்படாமல் இருந்து வந்தன. பழைய காலனித்துவச் சக்திகள் மனம்போன போக்கில் வரைந்த கோடுகளின் அடிப்படையிலேயே ஒரு தொகை தேசிய அரசுகள் பிரிக்கப்பட்டன. முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் அவர்கள் மத்திய கிழக்கைக் கூறுபோட்ட போது, இந்த



யசீர் அரபாத்

அரசுகள் ஏகாதிபத்தியத்தின் மேல் தொடர்ந்தும் தங்கியிருக்கும் விதத்தில் பார்த்துக் கொண்டனர். பிரித்தானிய மாஜி காலனியாக விளங்கிய பாலஸ்தீனம், சியோனிச இஸ்ரேல் அரசினை நிர்மாணிக்கவும் ஏகாதிபத்திய பிடியினை மேலும் பலப்படுத்திப் கொள்ளவும் பயன்படுத்தப்பட்டது. நாசிகளால் 60 இலட்சம் யூதர்கள் கொன்று குவிக்கப்பட்ட வேளையில் அவர்கள் தமது நாடுகளில் காலடி வைக்கவும் இடமளிக்க மறுத்த ஏகாதிபத்திய ஆட்சியாளர் திடீரென பாலஸ்தீனத்தில் ஒரு யூதர் அரசினை அமைக்கும் 19ம் நூற்றாண்டின் சியோனிச பிற்போக்கு எண்ணத்தினை அரவணைத்துக் கொண்டனர். ஐரோப்பிய யூதர்களின் நிலைமையையிட்டு அனுதாபம் காட்டுவதன்றி, மத்திய கிழக்கினை மேலும் பிளவுபடச் செய்வதற்கான திட்டமிட்ட நடவடிக்கையாக இதில் இறங்கினர்.

இம்மகாநாட்டிற்கு ஜோர்ஜ் புஷ் தலைமை தாங்குகின்றார் இவர்பாரசீக வளைகுடாவில் இலட்சோப இலட்சம் ஈராக் போர்வீரர்கள், தொழிலாளர்கள், பெண்கள், குழந்தைகளை கொன்று, இரத்தக்களரியில் நீச்சலடித்து வந்துள்ளார். மாஸ்கோவில் சரிந்துபோன ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் மிகைல் கொர்பச்சேவ், இம்மகாநாட்டில் ஏகாதிபத்தியத்தின் 'பபூன்' ஆக கோணங்கி விளையாட்டில் ஈடுபட்டுள்ளார். 'அமெரிக்க மத்திய கிழக்கு இராஜதந்திரத்தின் ஆயுதமாக சோவியத் மாறியுள்ளது என கூறுவது கூட்டி மதிப்பிடுவதாகாது' என 'நியூயோர்க் டைம்ஸ் குறிப்பிட்டது.

'காம்ப்டேவிட்' ஒப்பந்தத்தின் வாரிசான ஹஸ்னி முபாரக், டெல்-அல்-சத்தார் படுகொலைகளின் அசாத் மட்டுமன்றி இறுதியில் பாலஸ்தீன விடுதலை இயக்க தூதுக் குழுவும் இதில் கலந்து கொண்டுள்ளது, பல்லாண்டுகால ஈடிணையற்ற போராட்டம், பிரமாண்டமானதைரியத்தின் பின்னர் பீ. எல். ஒ. தலைமை யுத்தத்தின் பின்னைய முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களான fln (அல்ஜீரியா) தேசாபிமான முன்னணி (சிம்பாபே)யின் காலடியில் சென்று தனது சொந்த மக்களை விற்றுத்தள்ள ஏகாதிபத்தியம் கூட்டிய மகாநாட்டில் உட்கார்ந்து கொண்டுள்ளது.

பீ.எல்,ஒ-தலைமை மாட்ரீட் மகா நாட்டை அங்கீகரித்தமை, ஏகாதிபத்தியத்துக்கும், சியோனிசத்துக்கும் எதிரான பாலஸ்தீன மக்களின் நீண்ட காலப் போராட்டத்தையே காட்டிக்கொடுப்பதாக உள்ளது. இந்த மகாநாட்டில் பீ. எல். ஒ.வின் பிரசன்னத்தைக் கூட இஸ்ரேல் நிர்ணயம் செய்யுமளவிற்கு இச்சமாதான, மகாநாட்டின் இலட்சணம் உள்ளது. ஒரு அனைத்துலக புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அரபுத் யூதர் தொழிலாள வர்க்க, தினை ஐக்கியப்படுத்துவதன் மூலம் மட்டுமே மத்திய கிழக்கில் ஏகாதிபத்தியத்துக்கும், சியோனிசத்துக்கும் எதிரான போராட்டத்தை நடாத்த முடியும். நான்காம் அகிலம், மத்திய கிழக்கு ஐக்கிய சோசலிச அரசுகளை அமைக்கப் போராடுகின்றது. மத்திய கிழக்கு பூராவும் அனைத்துலகக் குழுவின் கிளையை அமைப்பது இன்று உடனடிப் பணியாகியுள்ளது,

# மத்திய வங்கி: சம்பள கோரிக்கையின் மீது வர்க்க நடவடிக்கையில் இறங்க ஊழியர் தீர்மானம்

மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையை வென்றெடுக்கும் பொருட்டு தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதென நவம்பர் 7ம் திகதி கூடிய மத்திய வங்கி ஊழியர் சங்க அங்கத்தவர்கள் ஏகமனதாக தீர்மானம் செய்தனர்.

சங்கம் சமர்ப்பித்துள்ள சம்பள கோரிக்கைக்கு தீர்வு வழங்க 24 மணித்தியால காலக்கெடு வழங்கவும், அது நிராகரிக்கப்படுமிடத்து நவம்பர் 11ம் திகதி தொடக்கம் மறியல் போராட்டத்தில் இறங்கவும், அதன் பின்னரும் கோரிக்கைகள் நிறைவேற்றப் படவில்லையானால் உலகவங்கித்தாக்குதலுக்கு முகம் கொடுத்துள்ள ஏனைய தொழிலாளர்களுடன் சேர்ந்து பொது வேலைநிறுத்தத்தில் குதிக்க வேண்டும் எனவும் தீர்மானம் செய்யப்பட்டது

எச். எம். பி. ஹேரத்தினால் சமர்பிக்கப்பட்ட இப்பிரேரணை அங்குகூடியிருந்த சுமார் ஆயிரம் ம. வ. ஊ. ச. அங்கத்தினரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. ம. வ. ஊ. ச. மாஜி. செயலாளரான எச். எம். பி. ஹேரத் சங்கத்தினை அணிதிரட்ட முன்நின்றதன் காரணமாக வேட்டைக்குள்ளாகி கடந்த செப்டம்பர் மாதம் தொடக்கம் மத்திய வங்கி அனுராதபுர பிராந்தியப் பணிமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

ம. வ. ஊ. ச. பெரும்பான்மைப் பலம் கொண்டுள்ள தலைமை சமசமாஜ கட்சி சே. தோ. கருணாரத்னஉள்ளடங்கலான சந்தர்ப்பவாதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட 'கறுப்பு பட்டி' இயக்கம் அங்கத்தவர்களால் நிராகரிக்கப்பட்டது. மத்திய வங்கி நிர்வாகத்துக்கு அடிபணியும் இந்த உயிரற்ற வேலைத்திட்டத்தின் நோக்கம், நிர்வாகத்தின் விருப்பு, வெறுப்புக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சம்பளத்திட்டத்துக்கு இணங்கிப் போவதே. நிர்வாகத்துக்கு 24 மணித்தியால காலக்கெடு போதியதல்ல எனவும் இச்சந்தர்ப்பவாதிகள் முனகிக் கொண்டனர்.

பல மாதங்களாக சம்பளக் கோரிக்கையை இழுத்தடித்து விட்டு, தமது விருப்பு வெறுப்புக்கேற்ப தயார் செய்யப்பட்ட சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் பாக்கிப் பணமும் 24 மணித்தியாலத்துள் [illegible] செலுத்த [illegible] ஏன் 24 மணித்தியாலத்துள் சங்கத்தின் கோரிக்கைகளை அமுல் செய்ய முடியாது? என எச். எம். பி. ஹேரத் கேட்டார். நிர்வாகத்தின் சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் செலுத்தப்பட இருந்த சம்பள பாக்கிப் பணத்தையும் ஊழியர்கள் ஏற்க மறுத்துள்ளனர்.

ஹேரத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை ஏகமனதாகநிறைவேற்றியதோடு அதன்படி தொழிற்படுமாறு சங்கத் தலைமைப் பீடத்தினை நெருக்கினர். சே.தோ கருணாரத்ன—எம். டி. பிரேமதாச தலைமை நடுங்குவதைக் கண்ட ஒரு அங்கத்தவர் கூறியதாவது: பயம் வேண்டாம், தொழிற்சங்க நடவடிக்கையில் அங்கத்தவர்கள் முன்னணியில் நிற்பதாக' கூறினார். கூட்டத்தில் பேசிய டபிள்யூ. ஜயவீர, 'அங்கத்தவர்களின் கோரிக்கையின்படி போராட்டத்தினை நடாத்த முடியாது போனால் தலைமை இராஜினாமாச் செய்ய வேண்டும், எனக் கூறினார்.

வடக்கு — கிழக்கில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இடம்பெறும் யுத்தத்துக்கு செலவிட நேரிட்டுள்ளதாலும், அரசாங்கம் செலவு வெட்டில் ஈடுபட்டுள்ளதாலும் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என மத்திய வங்கி ஆளுனர் கூறியிருந்தார். இன்று அரச வர்த்தக வங்கிகளில் சம்பள அதிகரிப்பின் பின்னர் தமது மனம்போன போக்கில் சம்பள அதிகரிப்பை தயார் செய்துள்ளார். இத்திட்டத்தின் படி சிற்றூளியர், எழுதுவினைஞர் தரங்களைச் சேர்ந்தவர்களுக்கு குறைந்தபட்ச சம்பள உயர்வும், அதிகாரிகள் தரத்துக்கு அதிகபட்ச சம்பள உயர்வும் கிடைத்துள்ளது. இதன்படி சம்பளத்தில் பெரும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த முரண்பாட்டுத் திட்டம் சிறிது காலத்துக்கு முன்னர் உலக வங்கி கட்டளையின் பேரில் வனசிங்க கமிட்டியால் தயார் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேர்லின் உலகத் தொழிலாளர் மகாநாடு:

# சென்னையில் (சோ. தொ. க.) முன்னோடி மகாநாடு:

செப்டம்பர் 29ல்இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகம் ஏற்பாடு செய்த ஏகாதிபத்திய யுத்தத்தையும், காலனித்துவத்தையும் எதிர்ப்போம், என்ற தலைப்பில் சென்னையில் நடைபெற்ற முன்னோடி மாநாட்டில் பல்வேறு ஆலைகளையும் சேர்ந்த தொழிலாளர்களும், இளைஞர்களும் பங்கு கொண்டார்கள். இம் மாநாடு நவம்பர் மாதம் 16-17 பேர்ளினில் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு நடாத்த இருக்கும் உலகத் தொழிலாளர் மாநாட்டிற்கான முன்னோடி மாநாடாகும். இம்மாநாட்டில் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தலைவர்களும் பங்குபற்றினார்கள், இம்மாநாடு அதன் சர்வதேசிய[illegible]ன்மையை சிறப்பாக வெளிப்படுத்தியது.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தோழர் அருண்குமார் மாநாட்டில் பங்கு கொண்ட சர்வதேச பிரதிநிதிகளையும், தொழிலாளர். களையும், இளைஞர்களையும் வரவேற்றார். மாநாடு தொடங்கும் பொழுது புற்றுநோயினால் செப்டம்பர் 15ல் மரணமடைந்த தோழர் பில் பிரெஸ்டுக்கு 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அவரது 53 வருடகால புரட்சிகரமான போராட்ட வாழ்வை கௌரவிக்குமாறு அருண்குமார் கேட்டுக்கொண்டார். இறக்கும் [illegible]ழுது 72 வயது நிறைந்ததோழர்பில்பிரெஸ்ட் நான்காம் அகிலத்தின் ஸ்தாபக உறுப்பினராவார். அவர் 1960களில் அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கட்சியின் தலைமை பப்லோவாத திருத்தல்வாத நிலைப்பாட்டை எடுத்த பொழுது அதற்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு நடாத்திய போராட்டத்திற்கு ஆதரவளித்தார். நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட அமெரிக்க ட்ரொட்ஸ்கிச கட்சியான வேர்க்கர்ஸ் லீக்கின் உறுப்பினராக சேர்ந்து ட்ரொட்ஸ்கிசத்திற்காக தொடர்ந்து போராடினார். இறுதி வரையில் தோழர். பில் பிரெஸ்ட் சுறுசுறுப்பாக ட்ரொட்ஸ்கிச கட்சியை கட்டும் பணிகளில் ஈடுபட்டிருந்தார். அவர் தனது அனுபவங்கள், அறிவு அனைத்தையும் இளையதலைமுறை தோழர்களுடன் பகிர்ந்து கொண்டார். தோழர் பில்பிரெஸ்ட் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் 50 வருடங்களுக்கு மேலாக மார்க்சிசத்திற்காக ட்ரொட்ஸ்கிசத்திற்காக—நடத்திய போராட்டம் சர்வதேசிய ரீதியாக ட்ரொட்ஸ்கிச அமைபுக்கு பெரும் உற்சாகத்தை வழங்குவதாக இருந்தது என்று அருண்குமார் குறிப்பிட்டார்.

தலைமையுரை அருண்குமார் மேலும் குறிப்பிட்டதாவது. சென்னையில் நடக்கும் இம் முன்னோடி மாநாடு நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்டு இந்தியாவில் இயங்கும் ட்ரொட்ஸ்கிச கட்சியான சோசலிசத் தொழிலாளர் கழகம் இந்தியாவில் நடத்தும் முதலாவது முன்னோடி மாநாடு இது இதைப் போன்ற முன்னோடி மாநாடுகள் முக்கிய தொழிற்துறை நகரங்களான கல்கத்தாவிலும், பம்பாயிலும் நடத்தப்படும். இம் மாநாட்டின் குறிக்கோள் சர்வதேச தொழிலாள வர்க்கத்தை ஒரு புரட்சிகர முன்னோக்கின் அடிப்படையில் ஐக்கியப்



சோ. தொ. க. வில்லிவாக்கம் தேர்தல் தொகுதி பிரச்சாரக் கூட்டம்

படுத்துவதற்கான உலகக் கட்சியை கட்டி எழுப்புவதாகும்.

நான்காம் அகிலத்தை கட்டுவதற்காக ட்ரொட்ஸ்கியின் வரலாற்று முக்கியத்துவமிக்க போராட்டமும், ஸ்டாலினிசத்திற்கும், மத்திய வாதத்திற்கும் எதிராக ட்ரொட்ஸ்கியும், நான்காம் அகிலமும் அதன் தொடர்ச்சியாக அனைத்துலக குழு பப்லோ திரிபு வாதிகளுக்கு எதிராக நடத்திய போராட்டமும் இன்று வரலாற்று ரீதியாக ஊர்ஜிதமாகி உள்ளது. 1923இலிருந்து சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் அரசினுள் அதிகாரத்துவத்தின் வளர்ச்சிக்கு எதிராகவும், அதன் சர்வதேச காட்டிக் கொடுப்புகளுக்கு எதிராகவும் ட்ரொட்ஸ்கியும் இடதுசாரி எதிர்ப்பியக்கமும் நடத்தி வந்த உள் கட்சி போராட்டம் 1933ல் உச்சக் கட்டத்தை அடைந்தது. 1933ல் மேற்கு ஐரோப்பாவிலேயே மிகவும் பலம் வாய்ந்த ஜெர்மன் தொழிலாள வர்க்கத்தின் படுதோல்விக்கு ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் ஆதிக்கத்தின் கீழிருந்த மூன்றாம் அகிலத்தின் வழி காட்டுதல்கள் முக்கியகாரணமாகஇருந்ததாலும் தோல்விக்கு வழிவகுத்த ஸ்டாலினிசத் தலைமைகளின் கொள்கை சம்பந்தமாக மூன்றாம் அகிலத்தின் எந்தப் பகுதியும் விமர்சனம் செய்யாதத்னாலும் மூன்றாம் அகிலமும் ஸ்டாலினிச அதிகாரத்துவமும் எதிர்ப்புரட்சிகர சக்திகளாக மாறிவிட்டன என்ற முடிவுக்கு ட்ரொட்ஸ்கி வந்தார். ஒரு புதிய புரட்சிகர அகிலம் கட்டவேண்டுமென்று அறைகூவல் விடுத்தார். 56 வருடங்களுக்கு முன்னர் ஸ்டாலினிசம், உலக ஏகாதிபத்தியத்தின் ஏஜன்டாக தொழிலாள வர்க்கம் மத்தியில் இயங்கும் ஒரு எதிர் புரட்சிகரமான சக்திஎன்றுட்ரொட்ஸ்கிகூறிய போது அதை நம்பியவர்கள் மிகச்சிறிய எண்ணிக்கையானோரே.ஆனால் இன்று மாஸ்கோ ஸ்டாலினிச அதிகாரத்துவம் ஏகாதிபத்தியத்தின் ஏஜன்டு என்றும், எதிர்ப்புரட்சிகர சக்தி என்றும் நம்பாது இருப்பவர்கள் மிகச் சிறிய எண்ணிக்கையானோரே. அப்படியானவர்கள் இப்போது இருந்தால் சற்றேனும் அரசியல் அறிவற்றவர்களாகத் தான் இருக்க முடியும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோவியத் யூனியனிலும் ஸ்டாலினிசக் கட்சிகளின் வீழ்ச்சி ''தனி ஒரு நாட்டில் சோசலிசம்' என்ற மார்க்சிசய விரோத தீவிர தேசியவாத கொள்கைக்கு ஏற்பட்ட வீழ்ச்சியாகும். நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு1989ல் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஸ்டாலினிச ஆட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ச்சி அடைந்தது சம்பந்தமாகஆய்வுசெய்து கூறுகையில் இது ஏகாதிபத்திய சங்கிலியின் பலவீனமான பிணைப்பில் ஏற்பட்ட வெடிப்புஎன்றுகூறியது. கடந்த இருபதாண்டுகளில் ஏற்பட்ட தொழில் நுட்பப் புரட்சியானது உலகப் பொருளாதாரத்தை மிகவும் இறுக்கமாக ஒன்றிணைத்ததுடன், அது அனைத்து தேசியவாத பொருளாதார இயக்கங்களையும் காலவதியாக்கி உள்ளது. உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரச அமைப்புக்கும் இடையிலான பதட்டம் கூர்மை அடைந்துள்ளது. எனவே அடிப்படையில் ஸ்டாலினிசத்தின் நெருக்கடி உலக முதலாளித்துவத்தின் நெருக்கடியாகும். இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னர் [illegible] தலைமைக் ஸ்டாலினிசத்தின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட சமநிலை இன்று முழுமையாக உடைந்து போய் விட்டது. ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சி ஏகாதிபத்திய நெருக்கடியின் பிரதிபலிப்பாகும். சீன, ரஷ்ய ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் அரசியல் காட்டிக்கொடுப்பானது ஏகாதிபத்தியவாதிகள் பின்தங்கிய நாடுகள் மீது காட்டுமிராண்டித்தனமான யுத்தம் நடத்துவதற்கு பெரும் உற்சாகத்தை வழங்கி உள்ளது. இப்படியான நிலைமையில் ஏகாதிபத்தியத்தையும், முதலாளித்துவத்தையும்உலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒழித்து, உலக சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை உருவாக்க நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு போராடுகிறது. அதேபோல் சோவியத்யூனியனிலும்கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சீனாவிலும் ஏகாதிபத்தியத்தின் ஏஜன்டுகளாக அதிகாரத்துவங்களை (தற்போது அந்த நாடுகளில் தோன்றி வளர்ந்து வரும் தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகளாக மாற்றமடைந்துள்ள ஆட்சியாளர்களை) அரசியல் புரட்சி மூலம் தூக்கி வீசி, அங்கே பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்கவும், தேசியமயமாக்கப்பட்ட சொத்துறவுகளை பாதுகாக்கவும் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு போராடுகிறது. இந்த அடிப்படையில் சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் பிரதிநிதிகளை பேர்ளினில் கூட்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு நடத்தும் மாநாடு வரலாற்று முக்கியத்துவம் நிறைந்ததாகும். மேலும் இது பப்லோவாத திரிபுவாதிகளுக்கு எதிராக அனைத்துலக குழு 38 வருடங்களாக நடத்திய போராட்டத்தை ஊர்ஜிதப் படுத்துவது மார்க்சிசத்திற்கு கிடைத்த வெற்றியை குறிக்கும் என்று அருண் குமார் குறிப்பிட்டார்.

## போராட்ட வரலாறு

முன்னோடி மாநாட்டுக்கான பிரதான அரசியல் அறிக்கை, நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் தலைவரும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளருமான தோழர் விஜே டயசினால் வழங்கப்பட்டது. ட்ரொட்ஸ்கியினால் ஸ்தாபிக்கப்பட்ட நான்காம் அகிலத்தின் போராட்டம், மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் போன்ற சிறந்த மார்க்சிசத் தலைவர்களின் வழியில் பாட்டாளி வர்க்க சர்வதேசிய கோட்பாடுகளுக்காக போராடிய வரலாற்றையும் காவுத்ஸ்கியின் தேசியவாத சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக லெனின், ரோசா லக்சம் பேர்க் ட்ரொட்ஸ்கி ஆகியோர் [illegible] சர்வதேசியத்துக்கான போராட்டம் பற்றியும் தோழர் விஜே டயஸ் விளக்கினார். சோவியத் யூனியனில் ஆகஸ்ட் 19ல் நடைபெற்ற சதியின் பின்னணி பற்றியும் அதற்கு ஏற்பட்ட தோல்வி பற்றியும் தோழர் விஜேடயஸ் ஆழமாக எடுத்துரைத்தார். சோவியத் யூனியனில் கொர்பச்சேவ் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் தலைமையில் 1985இலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட 'பெரெஸ்ரொய்கா கொள்கையின் விளைவாக துரிதப்படுத்தப்பட்ட சமூக, பொருளாதார நெருக்கடிகளைப் பற்றியும், முதலாளித்துவ மீட்சி வேலைத்திட்டத்திற்காகச் செயல்பட்டு வரும் ஸ்டாலினிச ஆட்சியாளர்களுக்கு எதிராக வளர்ச்சி கண்டுவரும் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் எதிர்ப்பையும், வெறுப்பையும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவிற்கு சோவியத் தொழிலாளர்கள் எழுதிய கடிதங்களை படித்துக் காட்டி அம்பலப்படுத்தினார். சோவியத் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக யனாயேவ் அதிகாரத்துவப் பிரிவின் சபையும் எல்ட்சின் தலைமையில் சோவியத் தரகு முதலாளித்துவ ஏஜண்டுகளின் சதியையும் தோழர் விஜே டயஸ் அம்பலப்படுத்தினார். யனாயேவ் தலைமையில் ஸ்டாலினிச அதிகாரத்துவம் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பு சதியின் உண்மையான இலக்கு, கொர்பச்சேவோ யெல்ட்சினோஅல்லசோவியத் தொழிலாள வர்க்கமே யனாயேவிற்கும். கொர்பச்சேவ் யெல்ட்சின் பிரிவுகளுக்கும் இடையிலான மோதல் அழிக்கப்பட்டு வரும் தேசியமயமாக்கப்பட்ட சொத்துக்களில் அதிக பங்கை யார் எடுப்பது என்பது பற்றியும், அவை யாருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருப்பது என்பதை பற்றியதுமாகும். ஆகஸ்டு சதியின் தோல்வியை தொடர்ந்து கொர்பச்சேவ் யெல்ட்சின்குழு தலைமை அப்பட்டமாகஉலக ஏகாதிபத்தியத்தின் ஏஜன்டுகளாக வளர்ந்து வரும் சோவியத் தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகளாக செயல்பட்டு வருகின்றது என்பதையும் விளக்கினார்.

பிரதான அரசியல் அறிக்கைக்கு பின்னர் மதிய இடைவேளை விடப்பட்டது. அதற்குப் பின்னர் கேள்வி நேரத்தின் போது பல கேள்விகள் ட்ரொட்ஸ்கிசத்திற்கும் லெனினிசத்திற்கும் வேறுபாடு உண்டா என்றும் குருஷ்சேவுக்கு எதிராக மாவோ நடத்திய போராட்டத்திற்கும்ட்ரொட்ஸ்கிசப் போராட்டத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன் என்றும் கேள்விகள் எழுப்பப்பட்டன. ஒரே சமயத்தில் உலக சோசலிசப் புரட்சி சாத்தியமா? என்றும் கேள்வி கேட்கப்பட்டது. சுமார் 3மணி நேரம் நடைபெற்ற கேள்வி — பதில் விவாதத்தின் போது கேள்விகளுக்கு நீண்ட விளக்கமான பதில்களை தோழர் விஜே டயசும், பு.க.க. வின் மத்திய குழு உறுப்பினர் தோழர் விக்சும் வழங்கினார்கள். பேர்ளினில் நவம்பரில் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு நடாத்தவிருக்கும் உலகத் தொழிலாளர் மாநாட்டுக்கு ஆதரவு தெரிவித்து சென்னை முன்னோடி மாநாடு ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

மாநாட்டு இறுதியில் ட்ரொட்ஸ்கியின் நூல்களையும்நான்காம் அகிலத்தின் வெளியீடுகளையும் வாங்குவதில்தொழிலாளர்களும், இளைஞர்களும் மிக்ந்த ஆர்வம் காட்டினார்கள். அடுத்த இதழில் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விகள்—அவற்றுக்கான பதில்கள் விரிவாக தரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்ட தனியார்மயமாக்கத்துக்கு எதி...

# தயார் செய்!

உலக வங்கியின் கட்டளைப் படி மக்கள் தோட்ட அபி விருத்திச் சபை, அரச பெருந்தோட்ட கூட்டுத் தாபனம் என்பவற்றை தனியார்மயமாக்குவதும் இலட்சக்கணக்கான தொழிலாளர் மீது கொடிய தாக்குதல் தொடுப்பதும் பிரேமதாச அரசாங்கத்தின் இன்றைய இலக்காகியுள்ளது.

இத்தாக்குதல்களுக்கு எதிராக தோட்ட தொழிலாளர் பொது வேலை நிறுத்தமொன்றை தொடுத்து, தொழில், வாழ்க்கைத்தரம், சனநாயக உரிமைகளை பேணும் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் தோட்டத் தொழிலாளரை வேண்டுகின்றன.

தனியார்மயமாக்கம் என்பது, ஏகாதிபத்திய பன்னாட்டு கம்பனிகளுக்கும் தேசிய முதலாளிகளுக்கும் தோட்ட நிர்வாகத்தை ஒப்படைக்கும் ஒரு சாதாரண விடயம் அல்ல. யூ. என்- பி. அரசாங்கமும், இம் முதலாளிகளும் தோட்டத் தொழிலாளருக்குஎதிராக என்றுமில்லாத இனவாதத்தைத் தூண்டி விட்டுலட்சக்கணக்கானோரை உடல்ரீதியில் கொன்றுதள்ளி, தொழிலாளரின் பலத்தை சிதறடிப்பதன் மூலம் அடிமைத்தனமான சுரண்டலுக்கு தயாராகி வருகின்றதென புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தோட்டத் தொழிலாளர் உட்பட முழுத் தொழிலாள வர்க்கத்தையும் எச்சரிக்கை செய்கிறது.

பிரேமதாச அரசாங்கம், இன்று ஜயவர்தனாவின் யூ. என். பி. அரசாங்க காலத்திலிருந்தே தயாரிக்கப்பட்டு வந்த உலகவங்கி கட்டளைகளையே அமுல் செய்ய ஆரம்பித்துள்ளது. இத்தயாரிப்புகளை அமுல் செய்ய, ''தோட்டத்துறையில் உபரி மனித வளத்தை'' அழிக்க வேண்டுமென மாஜி. பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் காமினி திசாநாயக குறிப்பிட்டதன் நோக்கம், இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளரை உடல்ரீதியில்அழித்து பயங்கர சுரண்டலுக்கு உள்ளாக்குவதே. தற்போது சிலோன் டுபாக்கோ, காசன் கம்பர்பச், மகாராஜாவும், இன்னமும் பெயர் வெளியிடப்படாதுள்ள பிரித்தானிய கம்பனி ஒன்றும் தோட்டங்களை எடுக்க விண்ணப்பித்துள்ளன. சில வாரங்களுக்கு முன்னர் சிலோன் டுபாக்கோ கம்பெனி புசல்லாவையில் மிகப்பெறுமதிவாய்ந்த காணிகளைக் கொண்ட சோகம, றொக்ஸ்சயில்ட், போபண்ட் என்னும் தோட்டங்களின் வர்த்தக நிர்வாகத்தை பொறுப்பேற்றுள்ளது. அத்துடன் இலங்கை தேயிலை ஏலவிற்பனைகளையும் பொருட்படுத்தாது, நேரடியாக உலக வர்த்தகச் சந்தையுடன் தொடர்பு கொண்டுமுள்ளது.

இந்த முதலாளித்துவக் கம்பெனியாளர்கள் தொழிலாளரை அழித்தொழிக்கும் பல நிபந்தனைகளைச் சமர்ப்பித்துள்ளனர். பிரேமதாச அரசாங்கம் இவற்றை முழுமனே ஆதரித்து, இணக்கம் தெரிவித்திருக்கும். இதைப் பற்றி எந்தவொரு தொழிலாளிக்கும் கிஞ்சித்தும் ஐயம் இருக்க முடியாது. அந்நிபந்தனைகள் வருமாறு:

1) சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தப் பிரகாரம் இந்திய கடவுச் சீட்டை வைத்துள்ள தொழிலாளரை தோட்டத்திலிருந்தும் வெளியேற்றுதல்- ஒரு இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் பலாத்காரமாக நாட்டிலிருந்து வெளியேற்றும் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழான கடவுச்சீட்டுக்களை கொண்டுள்ளனர்.

2) ஒய்வுபெறும் வயதை அடைந்துள்ள தொழிலாளருக்கு தொழில் மறுத்தல்— ஏழ்மைநிலை காரணமாக முதியவயதையும்கூடபொருட்படுத்தாது தொழில் புரிவோர் பாதிக்கப்படுவர்.

3) புதிதாக எத்தொழிலாளியும் வேலைக்கு சேர்க்கப்படலாகாது - இதன் அர்த்தம் இளைஞர், யுவதிகள் வேலையில்லாதிண்டாட்டத்துள் மூழ்கடிக்கப்படுவர்.

4) தொழிற்சங்க நடவடிக்கைகளை கட்டுப்படுத்துதல் - இதன் அர்த்தம் தொழிற்சங்கங்களை அழித்தலும், தொழிலாளரை பயங்கர கொடிய அழிவுக்கு உள்ளாக்கும் 'கோபரேட்வாத' கருவியாக தொழிற்சங்கங்களை மாற்றியமைத்தலும்.

தோட்டங்களைத் தனியார்மயமாக்கல் என்பதன் அர்த்தம், நட்டத்தில் இயங்குவதை ஒழித்து, அபிவிருத்தி செய்தல் என்ற மோசடி தம்பட்டம் அடிப்பில் பிரேமதாச அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. இந்த தோட்டங்கள் தனியார்மயமாக்கல் போன்றவை, ஏகாதிபத்தியவாதிகளின் நலனின் பேரில், சர்வதேசநாணயநிதிய ஆலோசனைகளை அமுல் செய்யவே இடம்பெறுகின்றன. இவ்வாலோசனை, முழுப் பொருளாதாரத்தையும் ஏகாதிபத்திய முதலாளிகளதுகாலனித்துவச் சுரண்டலுக்கு பலிவாங்க இலங்கை முதலாளித்துவ அரசாங்கத்துக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒரு சில மட்டுமே. வர்த்தக மயமாக்கலின் கீழ், அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் அனைத்தும்



தொண்டமான் மாஜி — ஜனாதிபதி ஜே: ஆர். ஜயவர்தனாவுடன்

அவை இலாபமீட்டினாலும் சரி, நட்டத்தில் இயங்கினாலும் சரி தனியார்மயமாக்கப்பட வேண்டும். ஏகாதிபத்தியவாதிகளுக்கு தொழிலாளர், ஒடுக்கப்படுவோரை எலும்புக்கூடாக்கும் வரை சுரண்டி நசுக்கும் அவசியம் உள்ளது. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் உட்பட சகல ஆசிய பிராந்தியங்களாகட்டும், லத்தீன் அமெரிக்க நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலாகட்டும் ஏகாதிபத்தியவாதிகள் கையாளவுள்ள புதிய நடவடிக்கை இதுவே. பொருளாதார பின்னடைவில் மூழ்கியுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தை போன்றேகடந்த காலங்களில் உலக பொருளாதாரத்தின் பெரும் பகுதியை கைப்பற்றிக் கொண்ட யப்பான், ஜேர்மன் ஏகாதிபத்தியங்களும், ஏனைய சிறு பலவீனமடைந்த ஏகாதிபத்தியங்களும் பழைய காலனிகளை அரசியல் ரீதியில் மட்டுமன்றி, இராணுவ ரீதியிலும் மீண்டும் கைப்பற்றி கொண்டு, மிலேச்ச சுரண்டலில் இறங்கும் நோக்கம் கொண்டுள்ளன. ஆழமடைந்த பொருளாதார நெருக்கடிக்குள்சிக்குண்டுள்ள இலங்கை போன்ற அரைக் காலனித்துவ நாடுகளிலும் முதலாளிகள் நடைமுறைப் படுத்த முயல்வது இந்தஏகாதிபத்திய வேலைத் திட்டங்களே.

இதன்படி அரசாங்கத்துறையை மட்டுமன்றி தனிப்பட்ட 'தேசியமுதலாளிகளின், கைத்தொழில்களையும் கூட துடைத்துக் கட்டும் அளவிற்கு ஏகாதிபத்தியவாதிகளின் பொறிவு தீவிரமடைந்துள்ளது. இம் முதலாளிகளின் பின்தங்கிய கைத்தொழில்களின் உயிரைப் பிடித்துவைக்க தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை நசுக்கி அவர்கள் அனுபவிக்கும் சேமநல சேவைகளை ஒழித்து விடுமாறு ஏகாதிபத்தியம் விதித்துள்ள கட்டளையின்அர்த்தம் இதுதான். வட்டி அதிகரிப்பு, கடன்பளு, கடன்வசதிவெட்டு இறக்குமதி அனுமதிபத்திரம் முற்றாக அகற்றல், ஏகாதிபத்தியவாதிகளது போட்டிற்கு முற்றாக கதவு திறத்தல், வெளிநாட்டு முதலாளிகளுக்கு எஞ்சியுள்ள தடைகளையும் நீக்குதல், விசேட சலுகைகள் வழங்குதல் போன்ற ஆலோசனைகள் தேசிய முதலாளிகளது கைத்தொழில்களுக்குத் குழிபறிக்கும்.

தோட்டத்துறையில் அமுலுக்கு வர ஆரம்பித்துள்ள இவை முழுத்தீவிலும் ஏகாதிபத்திய காலனித்துவ சுரண்டலை ஆழமாக்க ஆரம்பித்துள்ள வேலைத்திட்டமே, இது முன்னைய பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் செயற்படுத்தப்பட்ட பெரும் மக்கள்கொலைகளுடன்அமுல் படுத்தப்படவுள்ள வேலைத் திட்டமாகும். கடந்த சில ஆண்டுகளாக இத்தயாரிப்புகளை தோட்டப் புறத்தில் செயற்படுத்தும் திட்டம் இருந்து வந்தது. ஜயவர்தனா அரசாங்கத்தின் பின் பிரேமதாச அரசாங்கமும் இராணுவ பொலிஸ் படைகளை கட்டியெழுப்பியபடி அடக்குமுறையை தோட்டத்துறை பூராவும் நிறுவியுள்ளதுடன் தமிழ் பேசும் தொழிலாளருக்கெதிராக இனவாதத்தை தூண்டுவதையும் தற்சமயம் தீவிரமாக்கியுள்ளது. மலையக மக்கள் முன்னணி ஜி. சந்திரசேகரம் உட்பட சந்தர்ப்பவாத தலைமையும் அதன் போராளிகளும், வடக்கு — கிழக்கு தமிழ் விடுதலை புலி அமைப்புடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற பிரச்சாரத்தின் அடிப்படையில் யூ. என். பி அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டது இந்த இயக்கத்தில் ஓர் அங்கமே. யூ, என். பி— சிறிலங்கா உட்பட்ட முதலாளித்துவ கட்சிகள் ஒன்று இணைந்து இந்த இனவாத இயக்கத்தில் ஈடுபட்டுள்ளன. அதன் மறுஅம்சமாக முதலாம் நம்பர் ஏகாதிபத்திய கைக்கூலியான யூ. என், பி. அரசாங்கதுள் குந்தியுள்ள எஸ்! தொண்டமான் தோட்டப் பகுதியில் 'மலையக' நாட்டை? உருவாக்கி வருகின்றார்என்ற நச்சுத்தனமான பிரச்சாரமும் இடம்பெற்று வருகின்றது.

இதன் இலக்கு தொண்டமான் அன்றி, தோட்டத் தொழிலாளரே. தோட்டப் பகுதியை சூழவுள்ள நிலமற்ற ஏழைச் சிங்கள கிராமப்புற மக்களை தோட்டத் தொழிலாளருக்கெதிராக தூண்டிவிடும் கொடிய இயக்கம்இதன் மறுஅம்சமாகும்.

வடக்கு — கிழக்கு தமிழ் தேசிய இன தொழிலாளஒடுக்கப்பட்ட மக்களை அடக்கும் கொடிய இனவாத யுத்தம் ஏனைய பகுதிகளின் தொழிலாளரை அவர்களிடமிருந்தும் பிரிக்கும் இனவாத யுத்தத்தை நடிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் யூ. என். பி உள்ளடங்கலான முதலாளித்துவ வர்கத்தினால் பயன்படுத்தப்படும் வழி இதுவாகும். அதே தமிழர் விரோத இனவாதத்தை தோட்ட தொழிலாளருக்கு எதிராக தூண்டுவது அவர்களை இரத்தத்தில் மூழ்கடிக்கமட்டுமல்ல, அவர்களை சிங்கள மொழிபேசும் தொழிலாள மக்களிடமிருந்தும் பிரித்து, நசுக்கிவிடும் திட்டத்துடனேயே ஆகும். இச்சகல இலக்குகளும் ஏகாதிபத்தியவாதிகளது காலனித்துவ வேவைத்திட்டங்களை அமுல் செய்யவும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை நசுக்கவும் செய்யும் ஒன்றெனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கிறது.

தோட்டத்துறையைபொறுத்தமட்டில் ''நட்டத்திலியங்கும்'' தோட்டங்களை மூடி, அக்காணிகள்துண்டிக்கப்படும் அல்லது அவை முதலாளிகளது வேறு முயற்சிகளுக்குக் கீழ்ப் படுத்தப்படும். அங்கு வாழும் தொழிலாளர் அழிவுக்குள் தள்ளப்படுவர். இலாபத்தில் இயங்கும் தோட்டங்களெனப் படுபவற்றிலும் தொழிலாளர் பெருந்தொகையில் வெளியேற்றப்பட்டு, அடிமைச் சுரண்டல் இடம்பெறுவது நிச்சயம்.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் பின்னரும் இலங்கையில் முக்கிய வருமானம் ஈட்டிவந்த தோட்டத்துறை, ஸ்டேர்லிங் கம்பெனிகளின் உரிமைக்குட்பட்ட முகவர் இல்லங்களாலேயே நிர்வகிக்கப்பட்டது. 1948ல் சுதந்திரம் எனப்பட்டதன் பின்னரும் பரந்தளவிலான தோட்டத் துறையின் நிர்வாகம் பிரித்தானியஏகாதிபத்தியவாதிகளின் கையில் இருக்கும் வகையில் மாற்றப்பட்டது. பிரமாண்டமான இலாபச் சுரண்டலுக்கு வழிகோலும் வகையில் பொருளாதாரத்தை நிர்வகிக்கும் கடிவாளம் தமது கையில் இருக்கும் வகையில் 'சுதந்திரம்' வழங்கினர். இவற்றை பேணியபடி ஏகாதிபத்திய சார்பு முதலாளி வர்க்க ஆட்சியை காப்பாற்றும் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகளுடனான சதியின் ஒரு பாகமாக தொழிலாள வர்க்கத்தை இனவாத ரீதியில் பிளவுபடுத்தி வைக்கும் நோக்குடன் யூ.என் பி. அரசாங்கம் 1948 ஆகஸ்ட்டில் குடியுரிமைச் சட்டத்தை கொணர்ந்தது. இது தமிழ் பேசும் தோட்ட தொழிலாளரது குடியுரிமையையும் வாக்குரிமையையும் அகற்றும் கொடிய தாக்குதலை தொடுத்தது. முதலாளித்துவ வர்க்கம் தோட்டத் தொழிலாளரை விரட்டவும், சிங்கள மொழி பேசும் தொழிலாளரை அவர்களிடமிருந்து பிரிக்கவும் பயங்கர இனவாத இயக்கத்தை இங்ஙனம் தொடக்கி வைத்தது.

தீவின் தொழிலாள வர்க்கத்தின் முக்கிய இரண்டு கோரிக்கைகளாக ஏகாதிபத்திய சுரண்டலைத் தகர்க்க தோட்டதுறையை தொழி

லாள வர்க்க ஆட்சி...
தேசியமயமாக்குவது...
மொழிபேசும் தோட்...
லாளரது குடியுரிமை...
உரிமைகளை பெற்று...
ப்பதும் விளங்கின...
ஸ்கிச நான்காம் அ...
போல்ஷிவிக்-லெனினி...
யினதும், அதன் பின்...
சமசமாஜ கட்சியின...
கிய கோரிக்கையாக...
விளங்கின.

பப்லோவாத லங்...
சமாஜ கட்சி, 1950ம்...
காலத்தில் இக்கோ...
களை குப்பைத் ...
குள் வீசியது மட்...
1964ல் முதலாளித்து...
யாளரின் இனவாத...
அரவணைத்தபடி, ...
தொழிலாளரை ந...
தும் சிறிமா-சாஸ்திரி...
தத்திற்கும் ஆதரவ...
ஏகாதிபத்திய சுரண்...
எதிராக தொழிலாள-...
படும் மக்களிடையே ...
இடை...றாது கா...
போ...ம், தேசிய ...
தாரத்தை கட்டியெ...
என்ற வங்குரோத்து ...
திட்டத்தின் கீழ் 197...
சமாஜ, ஸ்டாலினிச ...
கள் பங்கெடுத்த மு...
துவ கூட்டரசாங்கம்...
கரித்த ஏகாதிபத்திய...
லிங் கம்பெனிகளுக்கு...
ஈடாக பலகோடி ரூபா...
வழங்கியது. இது ...
களுக்கு பாயத் ...
பார்த்திருந்த ஏகாதி...
வாதிகளுக்கு அவர்கள...
தனத்தை இலகுவில் க...
செல்ல உதவியதா...
தோட்டத் தொழில...
அடக்கி வைக்கும் இல...
அவ...நக்கெதிரான ...
வாதததை தூண்...
கொலைகார இய...
ஆரம்பிக்கப்பட்டது,

தோட்டத்துறையை...
வகிக்க ஏற்படுத்...
அரசபெருந்தோட்டக்...
தாபனமும் மக்கள் ...
அபிவிருத்தி சபையும்...
கடனிலும்நட்டத்திலு...
யுள்ளன என்ற பெரு...
சல் இப்போது ஆரம்...
யுள்ளது. தேயிலை வி...
பத்திச் செலவினையு...
வீழ்ச்சி கண்டுள்ளதாச...
படுகிறது. உலக வர்த்...
தையில் தேயிலை ஏ...
நூற்றுக்கு 14% வரை...
வரை சரிந்துள்ளது.
யாவும் உண்மையாகு...
ஙனமே இந்நிலைமை...
வாக்கியது தோட்ட...
கத்தை ஏற்ற முதலா...
அரசாங்கமும் உலக ...
சந்தையை இயக்கும்...
பத்திய பன்னாட்டு க...
களுமாகும். ஏகாதி...
வங்கியாளரும் தேசிய...
ளிகளான சகாக்களு...
போது இப்பிரசாரத்...
துவது, உண்மையான ...
திச் சக்தியான தொ...
வர்க்கத்தின் மீது நெ...
யை சுமத்தி. அழித்து...
தமது கொடிய கால...
சுரண்டலை தொடு...
யாகும்.

தோட்ட வருமா...
பெரும்பங்கு ஏகாதி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ...திராக பொதுவேலை நிறுத்தத்துக்கு

க ஆட்சியின் கீழ்
ாக்குவதும், தமிழ்
ம் தோட்டதொழி
டியுரிமை, அரசியல்
ள பெற்றுக்கொடு
ாங்கின. ட்ரொட்
காம் அகலத்தின்
-லெனினிச கட்சி
அதன்பின் லங்கா
கட்சியினதும் முக்
க்கையாக இவை

ாத லங்கா சம
, 1950ம் ஆண்டுக்
இக்கோரிக்கை
ளைத் தொட்டிக்
து மட்டுமன்றி
லாளித்துவ ஆட்சி
இனவாதத்தினை
தபடி, தோட்ட
ரை நாடுகடத்
-சாஸ்திரி ஒப்பந்
ஆதரவளித்தது.
ய சுரண்டலுக்கு
ாழிலாள-ஒடுக்கப்
ிடையே வெறுப்பு
கா...ப்பட்ட
தேசிய ...ருளா
கட்டியெழுப்புதல்
ரோத்து வேலைத்
கீழ் 1972ல் சம
ாலினிச தலைமை
த்த முதலாளித்
ரசாங்கம், சுவீ
திபத்திய ஸ்டோ
னிகளுக்கு நட்ட
காடி ரூபாக்களை
இது வேறிடங்
ாயத் தருணம்
ஏகாதிபத்திய
அவர்களது மூல
லகுவில் களற்றிச்
டதவியதாயிற்று.
தொழிலாளரை
கும் இலக்குடன்
கதிரான ... இன
தூண்டிவிடும்
இயக்கமும்
ட்டது,

துறையை நிர்
ற்படுத்தப்பட்ட
தாட்டக்கூட்டுத்
க்கள் தோட்ட
சபையும் பெரும்
டத்திலும் மூழ்கி
ற பெரும் கூச்
து ஆரம்பமாகி
லை விலை உற்
வினையும் விட
ள்ளதாக கூறப்
லக வர்த்தக சந்
ிலை ஏற்றுமதி
4% வரை இது
ள்ளது. இவை
மையாகும், அங்
லைமையை உரு
தாட்ட நிர்வா
முதலாளித்துவ
உலக வர்த்தக
யக்கும் ஏகாதி
ாட்டு கம்பெனி
ஏகாதிபத்திய
தேசிய முதலா
காக்களும் தற்
சாரத்தை நடத்
மயான உற்பத்
தொழிலாள
மீது நெருக்கடி
அழித்து விட்டு
காலனித்துவ
தொடுக்கவே

வருமானத்தில்
ஏகாதிபத்திய



1985ல் தாக்குதலுக்குள்ளான கொஸ்லாந்த கபரகல தோட்டத் தொழிலாளர்.

கம்பெனிகளுக்கு கடனைச் செலுத்த செல்கிறது. வங்கியாளர் தோட்ட வருமானத்தில் பெரும் பகுதியை வட்டியாக உறிஞ்சுகின்றனர். உற்பத்திற்குதேவைப்படும்உபகரணம், உரம், ஏனைய பொருட்களைவழங்கும் கம்பெனியானரும் ஏஜந்துகளும் வேறு பக்கத்தில் பெரும் பணத்தை பறிக்கின்றனர். தோட்ட நிர்வாகத்திலும் கூட்டுத்தாபனத்திலும் முதலாளிகளும் அரசியல் கட்சிகளின் அடிவருடிகளும் தோட்ட நிர்வாகிகளாக விளங்கி, லட்சக்கணக்கில் பணம் கொள்ளையடிப்பது பற்றி வார்த்தையில் கூறி அடங்காது. தற்போது யாவற்றுக்கும் மேலாக தேசியமயமாக்கலெனப் பட்டது. சுாணப்படினும் உலக வர்த்தக சந்தைக்கு தேயிலை அனுப்புதல், விலை குறித்தல் யூனிலிவர் போன்ற பன்னாட்டு கம்பனிகாரரின் கையிலுள்ளது ஈராக்கில் தேயிலை வர்த்தகம் நீக்கப்பட்டமை சோவியத் நாட்டு நெருக்கடி, ஏகாதிபத்திய நாடுகளது பின்னடைவு தீவிரமடைதல் தேயிலை வர்த்தகத்திற்கு பெரும் தாக்குதல் மட்டுமல்ல, பன்னாட்டு கம்பெனிகளது இலாபமட்டம் பேணுவதற்காகதேயிலை வாங்கும் விலையை குறைப்பதும் பகிர்ந்தளிக்கும் விலையை கூட்டுவதும் வேண்டுமென்றே நடத்தப்படுகிறது,

1972ல் தேசியமயமாக்கப்பட்ட தோட்டத்தின் தொழிலாளரது மிக முக்கிய பிரச்சினையான, ஜனநாயக குடியுரிமைவழங்கப்பெறாமை மட்டுமல்ல சம்பள பிரச்சினை வேலையின்மை. கல்வியின்மை, நலன்புரிசேவை, வீட்டு பிரச்சனை நீர்ப்பிரச்சனை போன்ற பிரச்சினைகளில் ஒன்று கூடதீர்க்கப்படவில்லை இச்சகல பிரச்சனைகளும் மிகவும் தீவிரமாகின. சிங்கள முதலாளிகள் இனவாதத்தை தூண்டி, பாரிய மக்கட் கொலைகளுக்கு கீழ்ப்படுத்தினர். எண்ணிலடங்காத தோட்ட இளைஞர் சித்திரவதை முகாம்களில் தண்டனைகளுக்கிலக்காகியுள்ளனர்.

பிரித்தானிய காலனித்துவ வாதத்தின் கொடிய ஒடுக்குதலினாலும், இலங்கை முதலாளி வர்க்கத்தின் அரைக் காலனித்துவ ஆட்சியின் கீழும் கொடிய சித்திரவதைக்கு தோட்ட தொழிலாளர் இலக்காகினர். இன்று சர்வதேச நாணய நிதி, உலகவங்கி கட்டளைப்படி முன்னொருபோதுமில்லாதமட்டத்தில் காலனித்துவ நாசகாரத் வேலைத்திட்டங்களை கட்டவிழ்த்தல் ஆரம்பமாகியுள்ளது. போராட்டம் மூலம் வென்றெடுத்து, இதுவரை பாதுகாத்த ஏதாவது தொழில், சேவை, வாழ்க்கைதரம் எஞ்சியிருப்பின், அவையாவும் தற்போது கட்டவிழ்த்து விடப்படும் கொடிய தாக்குதலினால் துடைத்துக் கட்டப்படும்.

கடந்த 14 ஆண்டுகளாக முதலாளித்துவ அரசாங்கத்தினதும் ஏகாதிபத்தியவாதிகளினதும் தாக்குதலை தோட்டத் துறையில் கட்டவிழ்த்து விடச் செய்யும் முக்கிய தயாரிப்புக்கு பங்களித்து, இலங்கை தொழிலாளர் காங்கிரசின் (இ.தொ.கா) எஸ். தொண்டமான் எம். எஸ். செல்லசாமி தலைமைத்துவம் உலகவங்கி நாசகார தயாரிப்பின் பங்காளராக முன்வந்துள்ளது.

1930 — 1940ம் ஆண்டுக் காலங்களில் இலங்கை சமசமாஜ கட்சி போல்ஷிவிக் — லெனினிச கட்சியின் தலைமையின் கீழ் புரட்சிகர போராட்டத்திலீடுபட தோட்டதொழிலாளர் அணிதிரண்டனர். தொண்டமான் தலைமையின் தாக்குதலுக்கு தள்ளிவிட்டமைக்கு 1950ல் தோட்டங்களை தொழிலாளர் ஆட்சியின் கீழ் தேசியமயமாக்கி, தோட்ட தொழிலாளரது குடியுரிமையை பேணும் கோரிக்கையை கைவிட்டு, சிங்கள இனவாத முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்த இக்கட்சிகளின் தலைமைகளே பொறுப்பு. 1963ல் பப்லோவாத சமசமாஜ தலைமைகள் தோட்ட தொழிலாளரை இந்தியாவுக்கு நாடு கடத்தும் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்துக்கு ஆதரவளித்து, கேவலமான இனவாத காட்டிக் கொடுப்புக்கு கூட்டுச்சேர்ந்தார்கள்.

தனர். 1972ல் தோட்ட தேசியமயமாக்கலின் கீழ் தோட்ட தொழிலாளருக்கு எதிரான இனவாத கொடிய தாக்குதலை, சமசமாஜ — ஸ்டாலினிச துரோக தலைமைகள் பங்குகொண்ட சிறிலங்கா — ல. ச.ச — கம்யூனிச கூட்டரசாங்கம் கட்டவிழ்த்தது.

இந்த காட்டிக்கொடுப்பை பயன்படுத்தி தனது ஆதிக்கத்தை கட்டியெழுப்பிய இ. தொ. கா, தொண்டமான் — செல்லசாமி தலைமை, இன்று யூ. என். பி. அரசாங்கத்தின் அமைச்சராக விளங்கி உலக வங்கி தயாரிப்பை அமுல் செய்ய நேரடியாக பங்கு கொள்கின்றனர். அத்தோடு அதன் நன்மைபற்றி பொய்ப் பிரசாரம் செய்து தொழிலாளரை ஏமாற்ற முயல்கின்றனர். தனியார்துறைக்குதோட்டங்கள் கையளிக்கப்பட்டால் பலாத்காரமாக 'கொலனிகள்' நிறுவுதல் தடுக்கப்படுமென்றும், தமிழ் பணக்காரர் தோன்றலாம் என்றும் தோட்டதொழிலாளர்தோட்டப்பகுதிகளை விலைக்கு வாங்க முடியும் என்றும் தொண்டமானும், செல்லச்சாமியும் அவர்களது பிராந்திய தலைவர்களும் தொழிலாளருக்கு தம்பட்டம் அடிக்கின்றனர். தோட்டதுறையில் உலகவங்கித் தாக்குதலை பயங்கரமாக செயற்படுத்தும் யூ. என். பி. இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தலைமைகள் கும்பலும் இ. தொ. கா. தலைமைகளது இதே பொய்த் தம்பட்டம் அடிப்பிலேயே ஈடுபட்டுள்ளனர்.

தோட்டத் தொழிலாளருக்கு எதிராக் இனவாத ஆத்திரமூட்டலுக்காக 'கொலனி' நிறுவுதல் தொண்டமான் கூட்டுச் சேர்ந்துள்ள யூ. என். பி. அரசாங்கத்தின் வேலைத்திட்டமாகும். எதிர்வரும் தினங்களில் தொழிலாளர் 'கொலனி' நிறுவப்படுதலை மட்டுமல்ல சகல விதத்திலும் இனவாத ஆத்திரமூட்டலைத் தூண்டும் கொடிய தாக்குதல்களையும் எதிர் கொள்ளப் போகிறார்கள் என்பதை அனுபவத்தில் காணப்போகிறார்கள். இது உலகவங்கி

செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் மேலதிக அம்சமாகும். கடந்தகாலங்களில் தோட்ட தொழிலாளருக்கு எதிரான இனவாத தாக்குதல்களின் போது தொழிலாளர் தாக்குதலுக்கெதிராக அணிதிரண்டு வருவதை தடுத்து, பலியிட்ட தொண்டமான் இம்முறையும் தொழிலாளரை திசை திருப்பி கடைகெட்ட காட்டிக் கொடுப்புக்கு தயாராகிறார். மலையக மக்கள் முன்னணி தலைவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர் எனக் குற்றம் சாட்டி வடக்கு-கிழக்கு ''பயங்கரவாதிகள் என்பவற்றுடன் தொடர்பு கொண்டவர்கள்' தோட்ட தொழிலாளர் எனக் கூறி தண்டிக்கும் இயக்கத்தை ஆரம்பிக்கும் யூ. என். பி. அரசாங்க முயற்சிக்கு கூட்டாளியாக தொண்டமான் விளங்குகிறார்,

தொண்டமான் — செல்லச்சாமி உள்ளடங்கலான இ. தொ. கா. தொழிற்சங்க தலைமையும் யூ. என். பி. சார்பு ஏனைய தொழிற்சங்கங்களும் தோட்ட தனியார் மயமாக்கலினால் கிடைக்கும் பிச்சையை பற்றி நாவூறியபடி தோட்டம், தோட்டப்பகுதிகளை தொழிலாளர் விலைக்கு வாங்க முடியுமென்ற பேராசையுடன் பார்த்துக் கொண்டிருப்பதுஉண்மைதான். இந்த தொழிற்சங்க அதிகாரத்துவங்கள், தொழிலாளர் இரத்தம் கசக்கிப் பிழியப்படுவதை பார்த்துக் கொண்டிருக்கும் கேவலமான கும்பலாகும். அவர்கள் தொழிலாளரது அபிலாசைகளை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் அல்ல. அவர்கள் ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களையும் ஏகாதிபத்திய எசமானர்களின் கீழ் மண்டியிடும் தமது தேவைகளையுமே பிரதிநிதித்துவம் செய்கின்றனர். தோட்டத் தொழிலாளருக்கு பங்கு வழங்கும்பேரில்பாழடைந்துபோன தோட்டங்கள் ஒன்றிரண்டை தொழிலாளர் தோளில் சுமத்தவும், நிலம் வழங்கும் பேரில் தொழிலாளருக்கு தரிசு நிலத் துண்டுகள் சிலதை ஒப்படைக்கவும் முயல்கின்றனர். இது கண்துடைப்பு நடவடிக்கை மட்டுமல்ல; அழிவுக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கையுமாகும்.

அரசாங்கத்துக்கு வெளியே இருந்தபடி உலகவங்கி வேலைத் திட்டங்களுக்கு (சமசமாஜ கட்சியின்) லங்கா தோட்ட தொழிலாளர் சங்கம், (கம்யூனிஸ்ட் கட்சியின்) ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கம், செங்கொடி சங்கம், (நவசமசமாஜ கட்சியின்) ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கம், சனநாயக தோட்ட தொழிலாளர் சங்க தலைமைகளும் தோள் கொடுத்து வருகின்றன.

தனியார்மயமாக்கத்தின் பின்னர் தோட்டத் தொழிலாளர் 24 மணித்தியால சேவையிலீடுபடவேண்டியிருக்கும். எனவும் தொழிற்சங்கங்கள் கலைக்கப்பட்டு சுதந்திர வர்த்தக வலைய நிலைமை உருவாகும் எனவும், தொழில், சம்பள பிரச்சினை பற்றி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தும் நிலைமை இல்லாமல் போகும் என்றெல்லாம் இவர்கள் முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர். தொழிலாளருக்குத் தொடுக்கப்படும் தாக்குதலை பற்றி இவ்வளவு அறிந்திருப்பினும் அதன் கொடுமையைப் பற்றி அறியாதிருக்க நியாயமில்லை. ஆனால் தொண்டமான் அரசாங்கத்துக்கு ஆதரவு தரும் நிலைமையில் தம்மால் எதுவும் செய்யமுடியாதென இவர்கள் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றனர். இது அப்பட்டமான ஒரு பொய். அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் இவர்களது தொழிற்சங்கங்கள் இருந்த போதும் அவை தனியார்மயமான போது எதுவும் செய்யாமல் தொழிலாளரை பலியிட்டனர். தொலைத் தொடர்பு திணைக்களம் தனியார் மயமாக்கலின் முக்கிய அங்கமாக கூட்டுத்தாபனமாக்கும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. நவசமசமாஜ எம். பி. வாசுதேவ நாணயக்காரவும், சமசமாஜ எம். பீ. அத்தாவுட செனவிரத்னவும் அதற்கு எதிராக வாக்களிக்காமல் பாராளுமன்றத்திலிருந்தும் நழுவினர்.

அரசாங்கத்துள் குந்திக் கொண்டுள்ள இ. தொ. கா. தலைமைகளைப்போல, வெளியேயுள்ள இக்கட்சித் தலைவர்கள் தொழிற்சங்க தலைமைகளும் ஏகாதிபத்தியவாதிகளது ஏஜந்துகளாக செயற்படுகின்றனர். உலக வங்கியினதும் சர்வதேச நாணயநிதியினதும் வேலைத்திட்டங்களை யூ. என். பீ. அரசாங்கம் செயற்படுத்தும் போது, இத்தலைமைகள் இருபக்கச் சார்பாக பங்கேற்றுக்கொண்டு தொழிலாளர் போராட்டத்திலிறங்குவதை தடுத்தனர். இணங்கிக் போகும் வகையில் செயற்பட்டன.

தொண்டமான் - செல்லச்சாமி தலைமை இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினைஅரசாங்கத்தின் முண்டுசோலாகப் பயன்படுத்துவதற்கு முடிவுகட்ட வேண்டும்: அந்த முண்டினை உடைக்க வேண்டும். இந்த முண்டினை உடைப்பது தோட்டத் துறையிலும் ஏனைய பகுதிகளிலும் உலக வங்கித் தாக்குதலுக்கு எதிராக தொழிலாள வர்க்கம் தொடுக்கும் பலம் வாய்ந்த அடியாகும். எனினும் இத்தலைமைகள் இ. தொ. கா. தலைமையை அரசாங்கத்திலிருந்தும் வெளியேறி, ஏனைய தொழிற்சங்கங்களுடன் சேர்ந்து போராட வருமாறு ஒருபோதும் கோரப் போவதில்லை. காரணம்? இத்தலைமைகளும் யூ, என். பி, மற்றும் முதலாளித்துவ கட்சிகளுக்கு பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் ஆதரவு வழங்குவதே. தொண்டமான். மலையக மக்கள் முன்னணி தலைமையை பொலீசில் பிடித்துக்கொடுக்க வெளி வெளியாக செயற்பட்டார். அத்தோடு ம. ம. மு. கூட்டுச் சேர்ந்திருந்த ஏனைய தொழிற்சங்க தலைமைகள், அவர்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளித்துவ மக்கள் முன்னணி வேண்

# பொது வேலைநிறுத்தத்துக்கு

## தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்துக்கு போராடு!

சமசமாஜத் தலைவர்கள் வெண்ணிற ஆடை போர்த்தும் லலித் அத்துலத்முதலி—காமினி திசாநாயக்கபேர்வழிகள் நேற்று ஜயவர்தனா — பிரேமதாச அரசாங்கங்களில் ஒன்றாக இரத்த வெள்ளத்தில் நீச்சலடித்து, இன்று 'பாராளுமன்ற ஜனநாயகத்தை' நோக்கித் திரும்ப வந்திருப்பவர்கள் அல்ல. ஜனநாயக இயக்கம் எனப்படுவதன் உச்சியில் உள்ள சி. ல. சு. க. தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஜனநாயகத்தின் தரத்தினை 1971 — 1977 அவசரகாலச் சட்ட சர்வாதிகார ஆட்சியின்போது இரத்தக் களரிகளுக்கு முகம் கொடுத்ததன் மூலம் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் அனுபவித்தனர். இது சமசமாஜ — கம்யூனிச கட்சித் தலைவர்களின் காட்டிக் கொடுப்பின் புண்ணியத்தால் கிடைத்தது. இவர்களின் இந்த 'ஜனநாயக இயக்கம்' 1971 — 1977ல் கூட்டரசாங்க அவசர காலச் சட்டத்துக்கு எதிராக எனக் கூறிக் கொண்டு இன்றைய பொனபாட்டிச சர்வாதிகார அரசியலமைப்புக்கும் அரை—இராணுவ ஆட்சிக்கும் வழிவகுக்கும் பொருட்டு பிரேமதாச, திசாநாயக்க, அத்துலத்முதலியுடன் கூட்டாகஜயவர்தனாவீதிக்கு கொணர்ந்த ஜனநாயக இயக்கத்துக்கு அணுவளவும் கயமையில் குறைந்தது அல்ல. அதற்குப் பதிலாக இது ஏகாதிபத்திய, காலனித்துவ நலன்களுக்குச் சேவை செய்யும் இலக்கினால் நிரம்பி வழிந்தது.

'இன்றைய அரசியல் பணி' யாகவும், 'முதல் நடவடிக்கை' யாகவும் முதலாளித்துவ தலைவர்கள் வகுத்துக்கொண்டுள்ளவையும் செய்யவேண்டியவை என சமசமாஜ — கம்யூனிச—நவசமசமாஜ தலைவர்கள் சிபார்சு செய்துள்ள 'பாராளுமன்ற ஜனநாயகத்தின்' தரத்தினை இலங்கையில் அறியாத தொழிலாளர் - ஒடுக்கப்படுவோர் யார்?

### வரலாறு

1947 சோல்பரி அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் 1948ல் சுதந்திரம் எனப்படுவதை வழங்க பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் தீர்மானம் செய்தனர். 'தேசிய' முதலாளிகளின் கைக்கு அரசியல் அதிகாரத்தினை மாற்றி, 'பாராளுமன்ற ஜனநாயகம்' என்ற பேரில் ஆட்சி அமைப்பைத் திணித்தனர். நான்காம் அகிலத்தின் கிளையான இந்திய போல்ஷிவிக் - லெனினிஸ்ட் கட்சியைச் சூழ தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள் ஈர்க்கப்படுவதையும், தேசிய புரட்சிகரப் போராட்டத்தின் அபிவிருத்தியை நசுக்கவுமே இது இடம்பெற்றது. முழு இந்தியத் துணைக் கண்டத்திலும் ஏகாதிபத்திய அமைப்பின் ஒரு பாகமாக இந்த நிர்வாக அமைப்புத் திணிக்கப்பட்டது. இந்தியத் துணைக் கண்டத்தைத் துண்டாடி, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை என்ற ஒற்றையாட்சி அரசுகள் உருவாக்கப்பட்டன. இவை ஏகாதிபத்தியவாதிகள் வரைந்த எல்லைகோடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. இந்தப் 'பாராளுமன்ற ஜனநாயகத்தின்' முதலாளித்துவ அரசியல் உபாயத்தின் அடிக்கல்லாக இன-மத மோதுதல்கள் சிருஷ்டிக்கப்பட்டன. தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள், திசை திருப்பப்பட்டனர், இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டனர். முதலாளித்துவத்தின் ஆரம்பக் கட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட விதிமுறையான ஜனநாயக உறவுகள் கூட இந்த பாராளுமன்ற ஜனநாயகம் எனப்படுவதாகவிளங்கவில்லை. தொழிலாள வர்க்கத்தின் எந்தவொரு அடிப்படைச் சமூகப் பிரச்சினையைத் தீர்க்கவோ அல்லது விவசாயிகளினதும் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய சிறுபான்மையினரினதும் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்யவோ ஏகாதிபத்தியவாதிகளுக்கு வம்பில் பிறந்த ஒட்டுண்ணி முதலாளி வர்க்கம் வெற்றி காணவில்லை. அது அந்த உரிமைகளுக்கு எதிராக நின்று வந்தது.

1948ல் இலங்கையின் முன்னேற்றமான தொழிலாளர்கள் இந்த ஏகாதிபத்தியச் சார்பு 'சுதந்திரமும்' ஆட்சி முறையும் மோசடியானவை எனக் காட்டி நான்காம் அகிலத்தின் போல்ஷிவிக்-சமசமாஜக் கட்சியின் தலைமையில் கொழும்பில் ஊர்வலம் நடாத்தினர்.

அவர்களை ஊர்ஜிதம் செய்யுல் வகையில் இந்த பாராளுமன்ற ஜனநாயகம் எனப்படுவதன் கீழ் தொழிலாளர் — ஒடுக்கப்படுவோர் படித்தது என்ன? 1948 ஆகஸ்டில்-அன்று தொழிலாள வர்க்கத்தின் பெரும்பான்மையினரும், இன்னமும் முக்கிய தனிப் பெரும்பான்மை குழுவுமான தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, இன வேறுபாட்டின் அடிப்படையில் முதலாளித்துவ யூ. என். பி. அரசாங்கத்தினால் ஒழிக்கப்பட்டது. 1953 ஹர்த்தாலில் 9 தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது இந்த 'பாராளுமன்ற ஆட்சி'யின் கீழேயே. 1956ல் தனிச்சிங்கள இயக்கத்தினை நடாத்தியதும் 1958 அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை அடக்குவதை இனக் கலவர மட்டத்துக்கு இட்டுச் சென்றதும், 1959ல் தொழிலாளர்களுக்கு எதிராக அத்தியாவசிய சேவை சர்வாதிகார விதிகளை இயற்றியதும், 1964ல் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு நாடுகடத்தும் சட்டம் இயற்றியதும், 1971-77 அவசரகால சர்வாதிகார ஆட்சியின் கீழ் 15,000 கிராமப்புற இளைஞர்களைக் கொன்று தள்ளியதும் இந்த 'பாராளுமன்ற ஜனநாயகத்தின்' கீழான இந்த 'ஜனநாயக முதலாளி' களே.

1978ல் இலங்கை முதலாளிகள், 1970-77 முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தின் கீழ் சமசமாஜ-கம்யூனிச தலைவர்கள் நடாத்திய கொலைகார காட்டிக் கொடுப்புக்களைப் பயன்படுத்தி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அரசியலமைப்புக்குப் பாய்ந்தனர்.

1968-75ல் யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய நெருக்கடியின் முதற் கட்டத்தில் அடிபட்ட இலங்கை முதலாளிகளின் பொருளாதார விதிமுறைகள் வங்குரோத்தடைந்து, நெருக்கடிக்குள்ளாகின. இக்கட்டத்தில் உலகம் பூராவும் ஆரம்பமாகியிருந்த ஏகாதிபத்திய மூலதனப் பாய்ச்சலுக்கு கதவு திறக்கும் பொருட்டு கிளர்ச்சியில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்கள், கிராமப்புற ஏழைகள், தமிழ் ஒடுக்கப்படுவோரை துரோகத் தலைவர்களின் காட்டிக் கொடுப்பைப் பயன்படுத்தி அரசபடை அணிகளைக் கொண்டு அடக்கும்பொருட்டு ஜயவர்தனாவின் 1978 சர்வாதிகார அரசியலமைப்பு கொணரப்பட்டது. இன்று யூ. என். பி - சி. ல. சு. க. வில் உள்ள இலங்கை முதலாளிகளின் முக்கிய குழுவினர் 'பாராளுமன்ற ஜனநாயகம்' பற்றி மோசடியாகக் குறிப்பிடக் காரணம் இந்தத்தேவைகளும், நெருக்கடியும் தணிந்து போய் விட்டது அல்ல. ஏகாதிபத்தியவாதிகளதும் அவர்களது கையாட்களதும் தேவையும், நெருக்கடியும் உக்கிரமடைந்துள்ள நிலையிலேயே பேசிக் கொள்கின்றனர். அது முதலாளிகளது கேவலம் எதிர்ப்புரட்சி தயாரிப்புக்கும், தலைவர்களது துரோக மோசடிக்கும் நல்ல அடையாளம். ஜனநாயகம் பற்றிய ஊழையிடலின் உள்ளடக்கம் ஏகாதிபத்தியவாதிகளுக்கும், ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளுக்கும் உரிய விதத்தில் சுரண்டும் ஜனநாயகமாகும்.

முதலாளிவர்க்கத்தின் இந்த எதிர்ப்புரட்சிப் பயணம் நிச்சயமாக இரத்தத்தினால் வரையப்பட்டுள்ளது: இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில் பின்தங்கிய நாடுகளின் முதலாளி வர்க்கங்கள் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் எந்தவொரு பாத்திரத்தினையும் இட்டு நிரப்புவதில் வெற்றிகாணப்போவதில்லை.

### பாராளுமன்ற ஜனநாயகம்

முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தை உண்டு பண்ணுவது எப்படியும்தொழிலாள வர்க்கத்தின் வேலைத் திட்டம் அல்ல. ''பாராளுமன்ற ஜனநாயகம்'' என்பது முதலாளித்துவ மூலதனத்தின் சர்வாதிகாரம் கொணரும் ஆட்சி வடிவமாகும். முதலாளித்துவம் வீழ்ச்சி அடையும் போது பாராளுமன்ற ஜனநாயகமும் வீழ்ச்சி அடைகின்றது. இராணுவ, பாசிச விதிமுறை ஆட்சிகளுக்கு முதலாளித்துவ ஆளும் வர்க்கம் திரும்புகின்றது.

பாட்டாளிவர்க்கமும்அதன் புரட்சிக் கட்சியும் பாராளுமன்றத்தைப் பயன்படுத்துகின்றது. அங்ஙனம் செய்வது பாராளுமன்றம் உட்பட முதலாளி வர்க்க ஆட்சியை தூக்கி வீசவும் பாராளுமன்றம் எனப்படுவதன் சுய கோலத்தை அம்பலப்படுத்தவும், புரட்சிகர பிரச்சாரத்தினை முன்னெடுத்துச் செல்லும் ஒரு மேடையாக மட்டுமே. எனினும் பாட்டாளி வர்க்க புரட்சிகரப் போராட்டத்தின் மேடை அதுவல்ல. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு எதிராக வர்க்க எதிரியின் முகாமுக்கு ஓடிச் சென்ற கவுட்ஸ்கிக்கு எதிராக லெனின் வழங்கிய பதிலை இன்று இந்தத் துரோகத் தலைவர்களின் நிச கோலத்தை புரிந்து கொண்டு வர்க்க எதிரிக்கு எதிரான போராட்டத்துக்குத் தயார் செய்யும் பொருட்டு பாட்டாளி வர்க்கம் கற்க வேண்டும்:

''...ஆனால் கவுட்ஸ்கி மறந்து போகும் விதத்தில் முதலாளித்துவப் பாராளுமன்ற முறையின் வரலாற்று எல்லைகள், பாரம்பரிய எல்லைகளை ஒரு லிபரல்வாதியால் மட்டுமே மறந்து போக முடியும் என்பதை குறிக்கிறது 'ஜனநாயகம்' வெளிப்படுத்தும் விதிமுறை சமத்துவங்களும் பாட்டாளி வர்க்கத்தினை சம்பள அடிமைகளாக்கும் அத்தகைய ஆயிரக்கணக்கான நிச எல்லைகளுக்கும் மோசடிகளுக்கும் இடையேயானபாரியமுரண்பாடுகள்மிகவும்ஜனநாயகரீதியிலான முதலாளித்துவ அரசில் கூட ஒடுக்கப்படும் மக்களுக்கு அடிக்கடி சந்திக்கின்றன. முதலாளித்துவ அமைப்பின் நாற்றம் கண்ட பொய்யான, மோசடியான அமைப்பினைக் காணும் விதத்தில் மக்களின் கண்களை இம்முரண்பாடுகள் ஈர்க்கின்றன. மக்களைப் புரட்சிக்குத் தயார் செய்யும் பொருட்டு: சோசலிசத்தின் பிரச்சாரகர்களாலும் தினமும் அம்பலப் படுத்தப்படுவதும் இம்முரண்பாடுகளே! இப்போது புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகியுள்ளதால் கவுட்ஸ்கி அதற்குப் புறமுதுகு காட்டி, மரணத்தறுவாயில் உள்ள முதலாளித்துவ ஜனநாயகத்தின் அழகினைப்பற்றி வர்ணிக்கத் தொடங்கியுள்ளார்.'' (லெனின் திரட்டிய நூல்கள் தொகுதி எண் 9 — சிங்களம் பக்கம்—27)

தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி கண்டு வரும் எதிர்ப்பினை முதலாளித்துவ பிற்போக்காளர்களின் கைக்குள் தள்ளிவிடும் விதத்தில் வாய்க்கால் பறிப்பதில் சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் நனவான முறையில் தொழிற்பட்டு வருகின்றார்கள் என நாம் குற்றம் சாட்டுகின்றோம்: இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலினிச தலைவர்களின் கருத்தை வெளியிடும் விதத்தில் 1991 செப்டம்பர் 14ம் திகதி 'அத்த பத்திரிகையில் அரசியல் நிருபரின் கட்டுரை கூறியதாவது: ''இன்று போராட்டத்துக்கு (!) கிளம்பியுள்ள பல்வேறு சக்திகளை நிறைவேற்றுஜனாதிபதி முறையை அகற்றும் போராட்டத்தில் ஒன்றாக இணைப்பது எமது பொறுப்பாகும். புனித விடயங்களின் பேரில் இப்போராட்டத்தின் பிளவினை உண்டுபண்ணவும் அவர்களுக்கிடையே மோதுதலை உண்டுபண்ணவும் எடுக்கப்படும் சகல முயற்சிகளையும் நாம் தோற்கடிக்க வேண்டும்.''

ஸ்டாலினிஸ்டுகள் தெளிவாகக் கூறுவது இதுதான்: எமது எஜமான்கள் புதியஅணி திரள்வில் ஈடுபட்டுள்ளனர். தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களும் அவர்களின் சகல பிரச்சினைகளையும் புறத்தே தள்ளிவிட்டு, அதற்கு ஆதரவு அளிக்க வேண்டும்: அங்ஙனம் செய்யாமல் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் போராடினால், தொழிலாளர்களும்—ஒடுக்கப்படும் மக்களும் முதலாளித்துவ கட்சிகளில் இருந்தும் சுயாதீனமாக அணிதிரட்டப் புரட்சியாளர்கள் முன்வந்தால்அவர்களை நசுக்க வேண்டும்!

அத்துலத்முதலி கும்பல் சி. ல. சு. க. தலைவர்களுடன் சேர்ந்து, பிரேமதாசவை தாண்டிச் சென்று, கிண்டிவிடும் தமிழர் விரோத இனவாத நெருப்புக்கு எண்ணெய் வார்க்க சமசமாஜ, கம்யூனிச. நவசமசமாஜ, தலைவர்கள் அணிதிரள்வது அவர்களின் காட்டிக்கொடுப்பின் எதிர்ப்புரட்சித் தன்மையை சுட்டிக் காட்டுகின்றது. ஸ்டாலினிச 'அத்த'வும் நவசமசமாஜ 'ஹரய' பத்திரிகைகளும் இந்த இனவாதப் பிரச்சாரத்துக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன. சிங்கள, தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களைக் கூறுபோடும் இந்த இனவாத ஆத்திரமூட்டல்கள் ஏகாதிபத்தியச் சார்பு சர்வாதிகாரத்தினை திணிப்பதற்கு பிற்போக்கு முதலாளி வர்க்கத்துக்கு அவசியப்படு

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# டாம்! யூ. என். பி.யை வெளியேற்ற தயார் செய்!

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அரசியல் குழுவின் அறிக்கை

கின்றது. இந்தச் சந்தர்ப்பவாதத் தலைவர்களின் சிங்கள இனவாதக்கூச்சலை வெறுத்து ஒதுக்குமாறு நாம் தொழிலாள வர்க்கத்தினை வேண்டுகின்றோம்.

### சுயாதீன வேலைத்திட்டம் இல்லை

பிற்போக்கு முதலாளித்துவக் கும்பல் சமர்ப்பித்த அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையில் தொங்குவதன் மூலம் சமசமாஜ – கம்யூனிச - நவசமசமாஜ தலைவர்கள், ஏகாதிபத்[illegible]வாதிகளில் இருந்தும், ஏக[illegible]திபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்தில் இருந்தும் சுதந்திரமான வேலைத்திட்டம் தமக்குக் கிடையாது என்பதை நிரூபித்துள்ளார்கள். ஒருதடவை சிறிமாவோ பண்டாரநாயக்காவினதும் மற்றொரு தடவை ஜயவர்தனாவினதும் பிறிதோர் தடவை பிரேமதாச அரசாங்கத்தினதும் ஏஜன்டுகளாக செயற்பட்ட இவர்கள், இன்று முதலாளிகளின் புதிய அணிதிரளல் மூலம் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களைஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிமைப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்[illegible] 'மோசமான நிலைக்கு' முகம் கொடுப்பதாகவும் அதிலிருந்து விடுவிட முதலாளிகளின் ஜனநாயக இயக்கத்துடன் இணைய வேண்டும் எனவும் இத்தலைவர்கள் கூறுகின்றார்கள். இதன் மூலம் முதலாளிகளின் இன்றைய கொடிய ஆட்சி ஏதோ ஆகாயத்தில் இருந்து வீழ்ந்தது போல் இவர்கள் பேசிக்கொள்கிறார்கள். சமசமாஜ கட்சித் தலைவர்கள் 1964ல் ஸ்டாலினிச முதலாளித்துவ கைக்கூலிகளுடன் சேர்ந்து முதலாளித்துவ கூட்டரசாங்கத்தில் நுழைந்ததோடு 1987ல் இந்திய ஆக்கிரமிப்புக்கு ஆதரவளிக்கும் 'மோசமான நிலை'யைத் தோற்றுவித்தனர். அத்தோடு ஏகாதிபத்திய ஆட்சி முறையை காக்கும் - முண்டு கொடுக்கும் இயக்கமாக ஆரம்பமான இந்த வேலைத்திட்டம் இன்று காலனித்துவத்துககு வக்காலத்து வாங்கும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது.

தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களைக் காட்டிக்கொடுக்கும் பப்லோவாத நவசமசமாஜ வலதுசாரி மத்தியவாத தலைவர்களின் நடவடிக்கைகளையிட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சிறப்பாக எச்சரிக்கை செய்கின்றது. 'ஜனநாயகத்தை' உருவாக்கும் முதல் நடவடிக்கையாக அத்துலத்முதலி கும்பல், சி. ல. சு. க, மற்றும் முதலாளித்துவ பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பொது அறிக்கையில் கையெழுத்திட்ட நவசமசமாஜ தலைவர்கள், இன்று சி. ல. சு. க.வுடன் மேடைகளில் ஏறி வருகின்றார்கள்: அதற்கிடையே 'தேசிய முன்னணி' அரசாங்கம் அமைப்பதை தாம் விரும்பவில்லை எனவும் இவர்கள் கூறிக்கொள்கிறார்கள். சி,ல.சு. க அத்துலத்முதலி கும்பல் 'விடுதலைப் புலிகளுக்கு பிரேமதாச அரசாங்கம் ஆயுதம் வழங்கியது' என்ற கூச்சலுடன் ஆரம்பித்துள்ள தமிழர் விரோத இனவாத பிரச்சாரத்துடன் மாட்டிக்கொண்டுள்ள இவர்கள் இதே சமயம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை 'அங்கீகரிக்கும்படி அத்துலத்முதலி, திசாநாயக்காவுக்கு அழைப்பு விடுக்கின்றனர். அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணைக்கு சில கிழமைகளுக்கு முன்னர் யூ. என். பி.யுடன் தேசிய இன பிரச்சினை தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக் குழுவில் சேர்ந்த நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் கமிட்டியில் உட்காரத் தாம் உடன்பாடில்லை என்றனர். இணங்கவில்லை என்கின்றனர். முதலாளிகன்னை ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டத்துக்கு தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களை அடிமைப்படுத்துவது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல என்பதை நன்கறிந்த இந்த மத்தியவாத துரோகக் கும்பல், அதற்கேற்பவே இந்த நனவான நடவடிக்கைகளில் குதித்துள்ளது என பு. க. க, சுட்டிக்காட்டுகின்றது.

இதற்கிடையே கடந்த 14 ஆண்டுகளாக இரண்டு யூ. என். பி. அரசாங்கங்களில் அமைச்சர் பதவிகளில் லஞ்சம் பெற்றுக் கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தொண்டமான் செல்வச்சாமி தலைமை, ஜனாதிபதி பிரேமதாசவின் குண்டர் சர்வாதிகாரத்தின்எடுபிடிகளாக முன்வந்துள்ளனர். தொண்டமான் கூறியுள்ளதாவது: ''நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்கையில் சகல பிரஜைகளும் - பெரும்பான்மையினரைப் போலவே சிறுபான்மையினரும் விருப்பத்தை தெரிவிக்க வேண்டும். பாராளுமன்ற முறையில் பிரதமர் தெரிவு செய்யப்படுவது பெரும்பான்மை அரசியல் கட்சியினால் மட்டுமே.

''இலங்கை வரலாற்றை திரும்பிப் பார்க்குமிடத்து வெஸ்ட்மினிஸ்டர் பாணியிலான பாராளுமன்ற ஜனநாயகம் இருக்கும் போது தான் சகல வகையான பிரச்சினைகளும் உண்டானதாக எனக்குத் தெரிகின்றது,''

தாம் பிரதிநிதித்துவம், செய்வதாகக் கூறும் தோட்டத் தொழிலாளர்களிடையே யூ. என். பி, அரசாங்கத்தின் கொடிய தாக்குதல்களுக்கு எதிராக வளர்ச்சி கண்டுவரும் எதிர்ப்பினை ஒடுக்கும் பொருட்டு பொலிஸ் - இராணுவ - குண்டர் பலத்தைக் கட்டவிழ்க்க வெளிவெளியாகவும், மறைமுகமாகவும் ஆதரவளிக்கும் தொண்டமான், ஜனாதிபதி முறை பற்றிய வர்ணனையில் ஈடுபட்டுள்ளதன் நோக்கம் அவர் இராணுவ சர்வாதிகாரத்தினை அமைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார் என்பதே.

### விடுதலைப் புலிகள் தலைமை

பிரேமதாச அரசாங்கத்தின் நெருக்கடி உக்கிரம் கண்டதோடு விடுதலைப் புலிகள் தலைமையின் பிற்போக்கும், வங்குரோத்தும் மேலும் மேலும் அம்பலமாகத் தொடங்கியுள்ளது. பிரேமதாச அரசாங்கத்தினை 'தூக்கிவீசும் இயக்கத்துக்கு' ஆதரவு தரும்படி அவர்கள் 'பகிரங்கக் கடிதம்' மூலம் கேட்டுக் கொண்டுள்ளனர் ஏகாதிபத்தியவாதத்தில் இருந்து சுதந்திரமடையும் முக்கிய பணியினைக் கைநழுவ விட்டுள்ள இவர்கள், ஒருமுறை ஏகாதிபத்தியச் சார்பு இந்திய முதலாளி வர்க்கம் பக்கமும், மறுமுறை ஏகாதிபத்தியச் சார்பு பிரேமதாச அரசாங்கம் பக்கமும் கொடுக்கல் வாங்கல் நடாத்திய இவர்கள் இன்று மற்றுமோர் ஏகாதிபத்திய சார்பு பிற்போக்கு கும்பல் பக்கம் இழுபட்டுள்ளனர். அவர்கள் ஆதரவளிப்பதாகக் கூறிக்கொண்டுள்ள முதலாளிகளின் இயக்கம், ஆரம்பம் முதலே தமிழர் விரோத இனவாதத்தினைத் தூண்டிவிட்டுள்ளமை இத்தலைவர்களின் வங்குரோத்தினை நிரூபித்துள்ளது.

அத்தோடு விடுதலைப் புலிகள் தலைமை சந்தர்ப்பவாத ரீதியில் பிரேமதாச அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்களுக்கும் காத்துக் கிடக்கின்றது.

ஜயவர்தனா அரசாங்கத்தினதும் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளதும், பிரேமதாச அரசாங்கத்தினதும் இனவாத யுத்தத்துக்கு பந்தம் பிடித்த தமிழர் கூட்டணி, ஈபிஆர்எல்எப் தமிழ் முதலாளித்துவக் கட்சிகள், இன்று இந்திய முதலாளிகளின் தலையீட்டுடன் லலித் அத்துலத்முதலி கும்பலுடன் வயிறளக்கின்றனர். அரச படைகளின் கூலிப்படைகளாகத் தொழிற்படும் புளொட். ஈபீடீபி தலைவர்கள், பிரேமதாச அரசாங்கம் இந்த மக்கள் படுகொலை [illegible] வேண்டும் என்று பிரச்சாரம் செய்கின்றனர். சிறிது காலத்துக்கு முன்னர் பிரேமதாச அரசாங்கத்தின் நெருக்கடியின் மத்தியில் பாராளுமன்றத்துக்கு வந்த ஈரோஸ் பா. உறுப்பினர்களின் முதல் நடவடிக்கை, தெற்கில் இரத்தக் களரிகளுக்கும் அவ்வாறே வடக்கு - கிழக்கில் கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்துக்கு தமிழ் ஒடுக்கப்படுவோருக்கு எதிரான யுத்தச் சட்டத்துக்கு வாய்ப்பளிக்கும் அவசரகாலச் சட்டத்தினைத் தொடர்ந்து நடாத்தச் சார்பாக வாக்களித்ததே,

இவை அனைத்தும் ஏனைய சகல முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களைப் போலவே இந்த தமிழ் குட்டி முதலாளித்துவஇயக்கங்களும் ஏதோ ஒரு விதத்தில் ஏகாதிபத்தியவாதிகளுடன் அல்லது ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளுடன் சமாதானத்துக்கான பாதை தேடுவதன் மூலம், தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொண்ட ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு எதிராகச் செயற்படுவதை மேலும் மேலும் எதிர்ப்புரட்சி கட்டத்துக்கு உயர்த்தி உள்ளனர்.

உலக ஏகாதிபத்தியஅமைப்பின் நெருக்கடியால் தோன்றியுள்ள இலங்கை முதலாளி வர்க்கத்தின் ஆழமான நெருக்கடியானது இலங்கை - தமிழ் ஈழம் பிராந்தியங்களின் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் தீர்க்கமான அரசியல் நிலைமைக்கு முகம் கொடுக்கத் தள்ளியுள்ளது. இந்நூற்றாண்டின்ஆரம்பத்தில் ஏகாதிபத்திய அமைப்பு நிலைநாட்டப்பட்டதும் உலகப் பாட்டாளி வர்க்கம், ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் உருவான சகல வரலாற்றுப் பிரச்சினைகளும் இன்று மீண்டும் தலைநீட்டியுள்ளது போலவே அதன் ஒரு பாகமாக பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் திரட்டப்பட்டதும், 1948ல் சுதந்திரம் எனப்பட்டதன் பின்னர் கீழ்ப்படுத்த முயற்சிக்கப்பட்டதுமான தீர்க்கப்படாத சகல பிரச்சினைகளும் தொழிலாள வர்க்கத்தின் எதிரில் தலைதூக்கியுள்ளன. ஏகாதிபத்தியவாதிகள் காலனித்துவ சுரண்டலை மீண்டும் கோரி நிற்பதோடு, கைக்கூலி முதலாளிகள் காலனித்துவத்துக்கு தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் அடிமைப்படுத்த வேண்டிய தாக்குதலுக்குத் தயாராகி வருகின்றார்கள். நெருக்கடி நிறைந்த முதலாளி வர்க்க ஆட்சியை தூக்கிவீசும் பொருட்டு தொழிலாள வர்க்கம் இராமப்புற ஏழைகள்' நகர்ப்புற ஒடுக்கப்படும் மக்களுடனான பிணைப்பினை உறுதி செய்து கொண்டு, பாட்டாளி வர்க்கத்தின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சுயாதீனமாக அணிதிரள வேண்டும். ஏகாதிபத்தியத்தினைத் தூக்கிவீசும் பொதுப் போராட்டத்தின் ஒரு பாகமாக இப்போராட்[illegible] விளங்குகின்றது. இதன் [illegible] அர்த்தம், அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துடனான ஐக்கியத்தினை உறுதி செய்வதன் அடிப்படையில் மட்டுமே இலங்கைத் தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் தமது போராட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

★ போனபாட்டிச ஜனாதிபதி அரசியலமைப்பில் இருந்து முதலாளித்துவ பாராளுமன்றத்துக்கு செல்வதற்கன்றி அவர்கள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் பேராளர்களைக் கொண்ட அரசியலமைப்புக் சபையைக் கூட்டி, ஜனநாயக அரசியலமைப்பினை வரைந்து கொள்ளப் போராட வேண்டும், ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளுக்கு அங்கு பிரதிநிதித்துவம் கிடையாது. 1948 அரசியலமைப்பினையும் முதலாளித்துவ ஆட்சி முறையையும் ஒழித்துக் கட்டுவதும் 1972, 1978 அரசியலமைப்புக்களை ஒழிப்பதும், சகல ஒடுக்குமுறைச் சட்டங்களை ஒழிப்பதும், ஏகாதிபத்திய அரசாங்கங்கள், அமைப்புக்களுடனான சகல உடன்படிக்கைகளையும் அகற்றுவதும் தமிழ் தேசிய சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையை ஊர்ஜிதம் செய்து, சகல தேசிய இனங்களுக்கும் சமஅந்தஸ்து வழங்குவதும், இன,மத வேறுபாடுகளைஒழிப்பதும்,தொழிலாளர், விவசாயிகளின் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்யும் விதத்திலும் இச்சபை அரசியலமைப்பைத் தயார் செய்ய வேண்டும். தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் இந்த நிச உரிமைகளை கேவலமாக நசுக்கி, 1948ல் ஏகாதிபத்தியவாதிகளும், 1972, 1978ல் ஏகாதிபத்திய கைக் கூலிகளும் தமது வர்க்க ஆட்சியைக் கொண்டு நடாத்துவதற்காகத் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், தமிழ் சிறுபான்மை தேசிய இனத்தினரை நசுக்கும் அரசியலமைப்புக்களைத் தயார் செய்தனர். தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் முதலாளிகள் தம்மை ஒடுக்கி வைக்கும் எதிர்ப்புரட்சி ஆட்சி முறைகளைத் திணிக்க இடமளியாமல் அரசியலமைப்புச் சபையைக் கூட்டு!என்றபிரச்சாரத்தினை ஆரம்பிக்கவும் அதற்கான போராட்டத்தினைக் கையில் எடுக்கவும் முன்னணிக்கு வர வேண்டும் எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

★ இந்தப் பிரச்சாரத்தினை முன்னெடுத்துச் செல்லவும், தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்கும் போராட்டத்தினை ஒழுங்கு செய்யவும் தமது பேராளர் மகாநாட்டைக் கூட்டுதல் அவசியம்: சகல தொழிலாளர் அமைப்புக்களதும், அமைப்புக்கள் இல்லாத இடங்களில் வேலைத்தல கமிட்டிகளை நிறுவி அவற்றில் ஏழை விவசாயிகள், ஒடுக்கப்படும் மக்களின் அமைப்புக்களை நிறுவவும் வேண்டும். அதன் மூலம் அவர்களின் பேராளர்கள் இம்மகாநாட்டிம் கலந்து கொள்ள வேண்டும்.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குட்டி முதலாளித்துவத் தேசியவாதத்தின் தவிர்க்க முடியாத முடிவு:

# விடுதலைப் புலிகள் விடுதலை இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கிறது

நந்த விக்கிரமசிங்க

இறுதிப் பாகம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்வைத்துள்ள அகில இந்திய சோசலிச குடியரசு ஒன்றியத்தினுள் இலங்கை - தமிழ் ஈழம் சோசலிசக் குடியரசினை அமைப்பது.பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினுள் மட்டுமே சாத்தியமாகும். வெற்றிகரமான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், தமிழ் தேசிய இனத்தின்சுய நிர்ணய உரிமையை ஒழித்துவிடாது. தமிழர் தாயகத்தில் வாழும் மக்கள், சிங்கள முதலாளித்துவ ஆக்கிரமிப்புப் படையின் ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபட்டு தாம் அமைக்கும் அரசின் தன்மையைப் பற்றியும் தீவின் ஏனைய பாகங்களுடன் எந்த வகையான உறவுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் தீர்மானம் செய்யும் உரிமை, தமிழ் ஈழம் தேசிய இனத்தின் கைகளில் இருந்து வரும். அந்நிலையில் தமிழ் சிறுபான்மையினரின் எதிர்காலம், தமிழ் ஈழம்—இலங்கை ஐக்கிய சோசலிச குடியரசு ஒன்றியத்தினுள்ளேயே அமைந்துள்ளது என்பதை ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினருக்கு விளங்கவைக்கப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடிவரும்.

தமது சர்வாதிகாரத்தினை நிறுவிக் கொண்ட தொழிலாள வர்க்கம் உடனடியாக முதலாளித்துவச் சொத்துக்களை தேசியமயமாக்க முன்செல்ல வேண்டும். இந்நடவடிக்கை, உலக சோசலிசப் புரட்சியுடன் ஐக்கியத்தினை ஊர்ஜிதம் செய்து, உலகளாவிய ரீதியில் முதலாளித்துவத்தினைத் தூக்கி வீசுவதைப் புரட்சியின் திட்டவட்டமான அமவசியாக்குகின்றது.

இன்றைய நெருக்கடி, முதலாளித்துவத்தின் நெருக்கடியாக இருப்பதால், முதலாளித்துவச் சொத்துக்களை தொழிலாள வர்க்கத்தின் கைகளில் எடுக்காமல் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினைப் பேண முடியாமல் உள்ளது. ஆதலால் இவை உலகளாவிய ரீதியில் புறநிலை அவசியமாகியுள்ள உலக சோசலிசப் புரட்சிக்கும் ஜனநாயகப் புரட்சிக்கும் இடையே கட்டாய உறவை உறுதி செய்கின்றது.

## தலைமை நெருக்கடி

பப்லோவாத சமசமாஜக் கட்சி ஸ்டாலினிஸ்டுகளுடன் சேர்ந்து இழைத்த காட்டிக் கொடுப்பே விடுதலைப் புலிகள் போன்ற குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் தமிழ் தேசிய ஜனநாயகப் போராட்டத்தின் மேல் பாய்ந்து கொள்வதற்கு வாய்ப்பான நிலைமையை உண்டுபண்ணியது. 1964ல் 21 கோரிக்கைகளைக் கைவிட்டு, முதலாளித்துவ சி. ல. சு. க.வுடன் கூட்டரசாங்கத்துக்குச் சென்றமை, அவர்களைச் சிங்கள முதலாளித்துவ அரசின் வீர காவலர்களாக்கியது; தமிழ்மொழிக்கு சமஅந்தஸ்து உட்பட தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தினை முழுமனே கைவிட்ட துரோகிகளாகினர்.

1972ல் முதலாளித்துவ கூட்டரசாங்கம் இயற்றிய இனவாத புதிய அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் வாக்களித்தன. கூட்டரசாங்கத்தின் அமைச்சர் பதவிகளை ஏற்று, அந்த அரசியலமைப்பினை சிருஷ்டிப்பதில் இவர்கள் முதலிடம் வகித்தனர்.

இவர்களது காட்டிக் கொடுப்புக்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய தமிழர் விடுதலைப் போராட்டம் ஆரம்பமானதும் இத்தலைவர்கள் ஒற்றையாட்சி பதாகையின் கீழ் இராணுவ ஆக்கிரமிப்புக்குத் தூபமிடுபவர்களாக மாறினர். இது 1971ல் தெற்கில் இளைஞர் படுகொலைக்கு இவர்கள் முதலாளித்துவ கட்சிகளுடன் சேர்ந்து ஆற்றிய நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதாகும்.

தமிழர் விடுதலைப் போராட்டமும் தெற்கின் தொழிலாளர் போராட்டமும் ஒன்றிணையும் அச்சுறுத்தலின் எதிரில்இத்தலைவர்கள்1987ல் இந்திய — இலங்கை உடன்படிக்கையை திணிக்கக் கூட்டுச் சேர்ந்தனர். இதனை மேலும் முன்னெடுத்துச் சென்று, தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தத்துக்கு நிதி ஒதுக்கிக் கொடுத்தனர். இதன் மூலம் யுத்தத்தினை தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் அங்கீகரிக்கச் செய்யப் படாப்பாடு பட்டனர்.

பிற்போக்கின் தாக்குதலுக்கு எதிராகத் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எடுத்த சகல முயற்சிகளையும் சிதறடிக்கத் தொழிற்பட்டதோடு. கிராமப்புற இளைஞர்களின் படுகொலைகளில் கலந்து கொண்டதன் மூலம் இத்துரோகத் தலைவர்கள் சிங்கள முதலாளித்துவ அரசின் முன்னணிப் பாது காவலர்களாகினர்.

இவை 1947ல் சிங்கள இனவாத அரசினை நிறுவ ஸ்டாலினிச, சமசமாஜ தலைவர்கள் வழங்கிய ஆதரவுடன் இணைந்துள்ளது.

நவசமசமாஜ மத்தியவாதிகள் 1970பதுகளில் இருந்து வடக்கே ஆயுதம் தாங்கிய அரச படைகளை அனுப்பும் பிரச்சாரத்தில்பங்குகொண்டவர்கள். 1987 இந்திய—இலங்கை உடன்படிக்கைக்கு ஆதரவளித்த அவர்கள் 1990ல்தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான யுத்த செலவினங்களுக்குச் சார்பாக பாராளுமன்றத்தில் வாக்களித்தனர். இவர்கள் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் எதிரிகள்.

இ. தொ. கா. தலைவர் தொண்டமானும் அவரின் சகாக்களும் அமைச்சர்கள் என்ற கோதாவில் தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு துரோகம் இழைத்தனர். சந்திரசேகரன் உள்ளடங்கலான தோட்டத் தொழிலாளர்களின் பாரம்பரியத் தலைவர்கள் அனைவரும் இதனுடன் இணைந்த முறையிலேயே செயற்படுகின்றனர்.

இவர்களின் காட்டிக் கொடுப்புக்கு எதிராக 1968ல் அனைத்துலகக் குழுவின் கிளையாகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பு. க. க. 1948ன் சுதந்திரம் எனப்படுவதற்கும், இனவாத சிங்கள முதலாளித்துவ அரசுக்கும் எதிராக ஆரம்பம் முதலே கிளர்ந்து எழுந்த இந்திய போல்ஷிவிக் – லெனினிஸ்ட் கட்சியின் (B. L. P. I) பாரம்பரியங்களை முன்னெடுத்துச் செல்கின்றது. அது 1945ன் பின்னர் திணிக்கப்பட்ட ஏகாதிபத்திய உலக அமைப்பினை நிராகரித்து, உலக சோசலிசப் புரட்சிக்காகப் போராடி வந்தது.

எனவேதான் பு.க.க. ஆரம்பம் தொடக்கம் இலங்கையின் அரசானது, யுத்தத்தின் பின்னர் பிறந்ததேசிய இனங்களின் சிறைக் கூடம் எனப் புரிந்து கொண்டது. ஆதலால் அது தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றது.

1972 ஜூன் 21ம் திகதிய 'கம்கறு மாவத்த' பத்திரிகை பின்வருமாறு குறிப்பிட்டது: ''மார்க்சிஸ்டுகளான நாம் சுயநிர்ணய உரிமைக்கான தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறோம்.

நாம் இந்த உரிமையை அங்கீகரித்து சோசலிசக் கொள்கைகளின் அடிப்படையில் தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்தினை அமைக்க சிங்கள, தமிழ் தொழிலாளர்களை அணிதிரட்டுவதன் மூலம் மட்டுமே அந்த உரிமையை வெற்றிகொள்ள முடியும் எனச் சுட்டிக் காட்டுகின்றோம்.''

அன்று அனைத்துலகக் குழுவின் தலைமையில் இருந்த ஓடுகாலி கும்பல் 1972ன் பின்னர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை அந்நிலைப்பாட்டினைக் கைவிடச் செய்ய செயற்பட்ட போதிலும் 1970ல் தமிழ் விடுதலைப் போராட்டம் வெடித்ததோடு பு. க. க. சிங்கள பேரினவாதத்திற்கு முகம் கொடுத்து தமிழ் விடுதலைப் போராட்டத்தினை வெற்றிக்கு இட்டுச் செல்லவும், சிங்கள இனவாத படைகளை தமிழ் தாயகத்தில் இருந்து வெளியேற்றவும் பிரபலமான பிரச்சார இயக்கத்தினைநடாத்தியது.இதன பேரில் தொழிற்சங்கங்களுள் போராடியதோடு. நாடு பூராவும் கூட்டங்களையும் நடாத்தியது. நிலைமையை ஆய்வு செய்து'தொழிலாளர்பாதை' யும் 'கம்கறு மாவத்த'வும் போராட்டத்துக்கு தலைமை தாங்கின.

1979 ஜூனில் ராஜாங்கனையில் யூ. என். பி. குண்டர்களால் படுகொலை செய்யப்பட்ட ஆர். பி, பியதாச, ஜே. வீ. பி. கொலைகாரர்களால் 1988 நவம்பரில் கொல்லப்பட்ட ஆர்.ஏ,பிட்டவேல, 1989 ஜனவரியில் பேராதனையில் கொல்லப்பட்ட. பி. எச், குணபால, அவர்களால் 1989 ஜூனில் கொலையுண்ட கிரேஷன் கீகியனகே ஆகிய தோழர்கள் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தினைப் பாதுகாக்கும் பொருட்டு உயிர்த்தியாகம் செய்த பு. க. க. அங்கத்தினர்கள். 1986ல் தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான வட்டமேசை பேச்சுவார்த்தைக்கு எதிரான போராட்டத்தில் பு. க, க. ஈடுபட்டதும் பு. க. க,வின் இன்றைய செயலாளர் விஜே டயஸ், புருடன் பெரேரா, ரூமன்பெரேரா விரான் பீரிஸ் ஆகியோர் அரசினால் கைது செய்யப்பட்டனர்.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி தேசிய அரசுகளை வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீசியுள்ள நிலைமையில் ஏகாதிபத்திய அமைப்பு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. இந்த அமைப்புடன் இணைந்த சகல தேசிய சீர்திருத்தவாத சந்தர்ப்பவாத தொழிலாளர் அமைப்புக்களும் தொழிலாள வர்க்கத்தின் சகல உரிமைகளையும் அழிப்பவர்களாக — முதலாளி வர்க்கத்தின் பிரிவினராக மாற்றம் அடைந்து வருகின்றார்கள். சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய சம்பவங்களின் படிப்பினை இதுதான், அவர்கள் இன்று தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான இரத்தம் தோய்ந்த ஒடுக்குமுறையினை தூண்டுபவர்களாகியுள்ளனர்.

தமிழ் விடுதலைப்போராட்டம் தொடர்பான இதன் படிப்பினை: இந்தத் தலைவர்

(9-ம் பக்கம் பார்க்க)

## தோட்டத் தனியார்மயமாக்கத்துக்கு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களை விடுதலை செய்யும்படி ஒருபோதும் கோரியதில்லை. மாறாக இவர்கள் தோட்டத் தொழிலாளருக்கெதிரான இனவாதத்தைத் தூண்டும் இயக்கத்திற்கு ஆதரவு வழங்குகின்றனர்.

உலக வங்கியினதும் ச. நா. நி. வேலைத்திட்டங்களுக்கு வால்பிடிக்கும் இத்தலைமைகளின் துரோகக் காட்டிக் கொடுப்புகளுக்கு இடமளியாதீர்! தனியார்மயமாக்கல் மூலம் திணிக்கும் பேரழிவுக்கு எதிரான போராட்டத்தைத் தொழிலாளர் கையேற்க வேண்டும்! வீணடிக்க காலம் இல்லை!

தனியார் மய மாக் கத் திற்கு எதிரான பொதுவேலைநிறுத்தத்தில் குதிக்கும் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் தொழிற்சங்கமான பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் கோருகின்றன. இ.தொ. கா. தலைமை அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதோடு ஏனைய சகல தொழிற்சங்க தலைமைகளும் அரசாங்க, மற்றும் முதலாளித்துவக்கட்சிகளுடன் கொண்டுள்ள உறவுகளை துண்டிக்க வேண்டுமெனவும், தனியார்மயமாக்கத்துக்கு முகம் கொடுக்கும் தோட்ட ஏனையபிரிவுதொழிலாளர் ஒருங்கு சேர்ந்துபொது வேலை நிறுத்தத்தை தொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தோட்டதுறை, ஏனைய துறை சார்ந்த தொழிலாளர் கோரவேண்டும். தமது தொழிற்சங்க கிளைகளில் தீர்மானங்களை நிறைவேற்றி, இப்பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமென நாம் கோருகின்றோம்.

பொதுவேலை நிறுத்தத்தினை முன்னேற்பாடாகக் கொண்டு போராட்ட விஸ்தரிப்புக்காக சகல தொழிலாளர் அமைப்புகளது பிரதிநிதிகளையும், ஸ்தாபனரீதியாக்கபடாத வேலைத்தலங்கள், தொழிற்சாலைகள், தோட்டங்கள், சுதந்திர வர்த்தக வலயங்களில் வேலைத்தலக் குழுக்களின்பிரதிநிதிகளையும் கிராமப்புற ஏழைகள், வேலையற்ற இளைஞர்களின்அமைப்புகளை கட்டியெழுப்பி அவற்றின் பிரதிநிதிகளையும், வடக்கு — கிழக்கு ஒடுக்கப்பட்ட தமிழ் விடுதலை போராளிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட உண்மையான தொழிலாளர் பேராளர் மாநாட்டைக் கூட்ட பிரச்சாரம் செய்யுமாறு நாம் சகல தொழிலாளரையும் கோருகிறோம். உலகவங்கி தாக்குதல், முதலாளித்துவ எஜமானர்களின் தாக்குதல், கிராமப்புற படுகொலைகள், வடக்கு-கிழக்கு தமிழ் ஒடுக்கப்படுவோரை அடக்கும் இனவாத யுத்தம் முதலியவற்றுக்கு எதிராகவும் சகல அரசியல் கைதிகளதும்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதலாளித்துவ மக்கள் முன்னணி வேண்டாம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒடுக்கப்படும் இளைஞர்களையும் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும். தமது வர்க்க அமைப்புக்களுள் தீர்மானங்கள் நிறைவேற்றியும் அவசியமான இடங்களில் அமைப்புக்களை நிறுவியும் முன்னணி வகிக்குமாறு வர்க்க நனவுகொண்ட தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை பு.க.க. வேண்டுகின்றது.

★ இம்மகாநாடு உலக வங்கி, யூ. என். பி. அரசாங்கம், முதலாளிகளின் தாக்குதல்களுக்கு எதிராகவும், தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இலங்கை முதலாளித்துவ அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கு எதிராகவும், கிராமப்புறப் படுகொலைகளுக்கு எதிராகவும் சகல அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யவும் பொது வேலைநிறுத்தத்தினை ஏற்பாடு செய்யத் தீர்மானம் செய்யவேண்டும். சகலதொழிலாளர் அமைப்புக்களிலும், கிளைகளிலும், வேலைத்தலங்களிலும், இளைஞர்களிடையும் தீர்மானங்கள் நிறைவேற்றவும், பேராளர் மகாநாட்டினைக் கூட்டவும் போராட வேண்டும். அவ்வாறே பொதுவேலை நிறுத்த தீர்மானம் எடுக்க மாபெரும் பிரச்சார இயக்கத்தினை ஆரம்பிக்கும்படி வர்க்க நனவு கொண்ட சகல தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும். இளைஞர்களையும் வேண்டுகின்றோம்.

★ இப்போராட்டத்தின் அத்தியாவசிய நடவடிக்கையாகத் தொழிலாளர் வசிப்பிடங்களிலும், வேலைத்தலங்களிலும், கிராமப்புறங்களிலும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் குழுக்களைஅணிதிரட்டி ஆயுதம்தாங்கிய தொழிலாளர் பாதுகாப்பு அணிகளை நிறுவ வேண்டும்.

தொழிலாளர்கள், ஒடுக்கப்படுவோர் தமது பலத்தினை அணிதிரட்டும் பொருட்டு தொழிலாளர் — விவசாயிகள் சபைகளை — சோவியத்துக்களை—கட்டியெழுப்ப முன்வரவேண்டும்.

தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படுவோரினதும் இப்போராட்டம், இதற்கு எதிராகஉள்ளஏகாதிபத்தியப்பிடியை உடைப்பதுடனும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிவர்க்க ஆட்சியை ஒழிப்பதுடனும் இணைந்துள்ளது. தொழிலாளர் — ஏழை விவசாயிகள் முகம் கொடுக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கும் விவசாய பிரச்சினைகளுக்கும் தீர்வுகளையும் தமிழ் தேசிய இனத்தை ஒடுக்குவதற்கு முடிவு கட்டுவதற்கும், ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியை ஒழித்து, ஏகாதிபத்தியத்தினை தூக்கிவீசும் பொருட்டு உலகத்தொழிலாளவர்க்கத்துடன் முன்செல்ல வேண்டும். ஏகாதிபத்தியச் சொத்துக்களையும் முக்கிய முதலாளித்துவக் கைத்தொழில்களையும் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்க வேண்டும். விவசாயிகளின் நிலப்பிரச்சினையைத்தீர்த்து, இடைநடு தரகர்களின் சுரண்டலை ஒழித்து, வங்கிகளுக்கும், வட்டிக்காரர்களுக்குமான கடன்களை ஒழிக்க வேண்டும். வடக்கு—கிழக்கில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்ய வேண்டும். இப்பணியினை நிறைவேற்றும்பொருட்டுதொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் யூ.என்.பி. அரசாங்கத்தினை வெளியேற்றி, இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை—சோவியத் சபைகளை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் — விவசாயிகள்அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர வேண்டும்.

இலங்கை — தமிழ் ஈழம் பிராந்தியங்களைச் சேர்ந்த தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களின் இந்தப் புரட்சிகரப் போராட்டம், உலகச் சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக — இந்தியத் துணைக் கண்டத்தில் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க ஆட்சிகளைத் தூக்கி வீசி, துணைக் கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தினை அமைப்பதுடன் வரலாற்று ரீதியில் இணைந்துள்ளது. ‘சார்க்’ மகாநாடு எனப்படுவதன் கீழ் தற்போது ஆளும் வர்க்கங்கள் பிராந்திய நாடுகளின் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக‘ பயங்கரவாத’ ஒழிப்பு என்ற பேரில் ஏற்படுத்திக்கொண்டுள்ள எதிர்ப்புரட்சிக் கூட்டுக்களைத் தோற்கடிக்கவும் அவ்வாறே பாட்டாளி வர்க்கப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லவும், காக்கவும், அபிவிருத்தி செய்யவும் இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தினை அமைக்கப் போராடுவது தீர்க்கமானது.

★ தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் தமது அரசியலமைப்புச் சபைக்கும், வர்க்கப் போராட்டத்தின் விருத்திக்கும், தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்துக்குமான போராட்டத்தினை இங்ஙனம் முன்னெடுக்கையில்சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் ‘‘போராட்டத்தினை பிளவுபடுத்தவும், மோதுதலை உண்டுபண்ணவும்’’செயற்படுவதாகக்கூறிக் கொண்டு பாய்ந்து விழலாம். முதலாளிகளுடன் கூட்டுக்களுக்காக எமது சுயாதீனமான போராட்டத்தினைக் கைகழுவிவிட நாம் தயார் இல்லை என்பது தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் குரலாக ஒலிக்கவேண்டும். முதலாளித்துவ மக்கள் முன்னணி வேண்டாம்! தொழிலாளர் — ஏழைகளின் போராட்டத்தினை சுயாதீனமாகஅணிதிரட்டு! இதுவே தொழிலாளர்—ஏழைகள் அவர்களுக்கு செய்யும் சிபார்சாக விளங்க வேண்டும்! தொண்டமான் — செல்லச்சாமி தலைமையை கொலைகார பிரேமதாச அரசாங்கத்தில் இருந்து வெளியேறி, இ. தொ. கா.வை தொழிலாளர்களின் சுயாதீனமான போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும் என தோட்டப்புற, நகர்ப்புறத் தொழிலாளர்கள் ஒரே குரலில் கூறவேண்டும்.

இவ்வளவு தூரம் சென்று ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்யும் பொருட்டு தமக்குப் பொறிக்கிடங்கு தோண்டும் இத்தலைவர்களை நம்பாதீர் என நாம் தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றோம்.

இலங்கை-தமிழ்ஈழம் பிராந்தியங்களிலும் இந்தியத் துணைக்கண்டப் பிராந்தியத்திலும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர வேலைத்திட்டத்தினையும், கட்சியையும் நிர்மாணிக்க நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இந்தியாவில் அதன் சகோதர இயக்கமான சோசலிசதொழிலாளர் கழகமும் மட்டுமே போராடுகின்றன. பாட்டாளி வர்க்கத்துக்குப் புரட்சிகர முன்நோக்கினை அனைத்துலகக் குழுவின் கிளைகள் மட்டுமே வழங்குகின்றன. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறும் அதன் பத்திரிகைகளான ‘தொழிலாளர் பாதை’, ‘கம்கறு மாவத்த’ பத்திரிகைகளை வாசிக்குமாறும் நாம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களை வேண்டுகின்றோம். பலம்வாய்ந்த இளைஞர் இயக்கங்களை கட்டி எழுப்புவதன் மூலம் புரட்சிக் கம்யூனிட் கழகத்தினைஉறுதிசெய்ய‘இளம் சோஷலிஸ்டுகள்’ இயக்கத்தில் சேருங்கள்.

அனைத்துலக ரீதியில் ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்திற்கும் எதிராக - உலகத் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டும் நடவடிக்கையின் ஒரு பாகமாக 1991 நவம்பர் 16-17ம் திகதிகளில் அனைத்துலக குழு பேர்ளினில் கூட்டும் உலக மகாநாட்டுக்கு ஆதரவளிக்கும்படியும் அதன் வெளியீடுகளை ஆய்வு செய்யும்படியும் நாம் சகல தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றோம்.

# தோட்ட தனியார்மயமாக்கத்துக்கு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைகாகவும்தமிழ்பேசும் தோட்டத் தொழிலாளருக்கு [illegible]யுரிமைக்காகவும் சகல ஒடுக்கப்படுவோரது ஆதரவுடனான பொதுவேலைநிறுத்தமொன்றை அணிதிரட்ட இப்பேராளர் மகாநாடு நடவடிக்கை எடுக்கவேண்டுமென நாம் கோருகிறோம்.

முதலாளித்துவஅரசுடமை, தனிப்பட்ட முதலாளிகளது உடமை இரண்டுமே தொழிலாள வர்க்கத்திற்கு எந்தவொருதீர்வையும்வழங்கஇலாயக்கற்றவை. உலகமுதலாளித்துவ அரச உரிமைமூலம்தொழிலாளர்களை தண்டிக்கவும், மண்டியிட வைக்கவும் தற்போது உலகவங்கி தாக்குதல்களையும் சுமத்தி பாரிய அழிவில் தள்ளிவிட போகின்றனர். முதலாளிகளதும் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ தலைமைகளதும் தேசியவாத வேலைத்திட்டங்கள் வங்குரோத்தடைந்து விட்டன. அவர்கள் ஏகாதிபத்தியவாதிகளது காலனித்துவ வேலைத்திட்டங்களை தோளில் சுமந்துள்ளனர். தற்போது சகல நாடுகளை போன்று இத்தீவின் தொழிலாள வர்க்கத்துக்கும் உள்ள ஒரே ஒரு வழி, உற்பத்தியில் சோசலிச உரிமையை நிலைநாட்டுவதே. அரைக்காலனித்துவ நாடுகளில் ஏகாதிபத்திய சொத்துடமைகளையும் சகல முதலாளிகளது கைத்தொழில், வர்த்தகங்களையும் தொழிலாளர் ஆட்சியின் கீழ் தேசியமயமாக்க வேண்டும். வர்த்தகத்தில் அரசின் ஏகபோக உரிமை நிலைநாட்டப்பட வேண்டும். இதனைக் காக்க ஏகாதிபத்திய அமைப்பை வேரோடுகளையும் — அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துடன் இணைந்து உலக சோசலிசப் புரட்சிக்காக போராட வேண்டும்.

இந்த அடிப்படையில் தோட்டத்துறை, சகல ஏகாதிபத்திய சொத்துடமை, அரச வர்த்தகம், அடிப்படை தனியார் முதலாளித்துவ சொத்துடமை ஆகியவற்றை தொழிலாளர் ஆட்சியின் கீழ் தேசியமயமாக்கி விடும் பிரசாரத்தில் இணையுங்கள்! அந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக தொழிலாளர்—ஏழைகள் அடங்கிய சோவியத் சபைகளினை அடிப்படையாக கொண்ட தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கமொன்றை ஆட்சியேற்றவும், அதற்காக போராடவும் முன்வருதல் அத்தியாவசியம். அத்தோட்ட தொழிலாளரைநசுக்கும் சகல அடக்குமுறை ஒப்பந்தங்களையும் கிழித்தெறிந்து, வடக்கு-கிழக்கு தமிழ் ஒடுக்கப்படுவோரின் சுயநிர்ணய உரிமையைநிலைநாட்டி, கிராமப்புற ஏழைகளை ஒடுக்கும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ் ஒடுக்குமுறையை ஒழித்து கட்டி, விவசாயிகளது பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் சனநாயக வேலைத்திட்டத்தை செயற்படுத்தவேண்டும். அத்தகைய தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் ஒன்றை நிறுவுவது இலங்கை தமிழ் ஈழ சோசலிச குடியரசினை எழுப்புவதன் மூலமே சாத்தியமாகும்.

தோட்டத்துறை தனியார் மயமாக்கம் இன்று மீண்டுமொரு தடவை, இவ்வேலைத்திட்டத்துக்காக போராட வேண்டிய பாரிய தேவையை புலப்படுத்தி நிற்கின்றது. தொழிலாள வர்க்க இயக்கத்தினுள் உள்ள சகல வகையறாவைச் சேர்ந்த தலைமைகளும் இந் நிலைமையில் ஏகாதிபத்தியத்திடம் தலைசாய்ந்தன. எந்த ஒரு சிறு தொழில்ரீதியான உரிமைக்காகவும் முன்நிற்க இவர்கள் மறுக்கின்றனர். இந் நிலைமையிலேயே புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர் - ஒடுக்கப்படுவோரை அணிதிரட்டும் போராட்டத்தை சகல பக்கங்களிலும் தொடுக்கத் தீர்மானித்தது. இளைஞரை அணிதிரட்ட ‘இளம் சோசலிஸ்ட்’ அமைப்பூடாக போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், சகல வேலைத்தலங்களிலும், நிறுவனங்களிலும் தொழிலாளரை அணிதிரட்டச் செய்யும் போராட்டத்தின் ஒரு பாகமாக, பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் தொழிற் சங்கத்தையும் நிறுவியுள்ளது. தோட்ட தொழிலாளர் மற்றும் [illegible] சங்கத்தில் இணையுமாறும் நாம் வேண்டுகின்றோம்.

தொழிலாளர் - ஒடுக்கப்படுவோரைப் புரட்சிகர வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரட்ட புரட்சிக் கட்சியைக் கட்டியெழுப்புவது மிகவும் தீர்க்கமானதாகும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கமயூனிஸ்ட் கழகம் அத்தகைய புரட்சிக் கட்சியே. தோட்டத்தொழிலாளர், மற்றும் தொழிலாளர், ஒடுக்கப்பட்டவர்களை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறும் அதன் வெளியீடுகளான ‘‘கம்கறுமாவத்த,’’ ‘‘தொழிலாளர் பாதை’’யை வாசிக்குமாறும் நாம் வேண்டுகின்றோம்,

# குட்டி முதலாளித்துவ தேசிய வாதத்தின்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தூக்கிவீசி, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினைத் கட்டி எழுப்பப் போராடுவதற்குப் புறம்பாக வெற்றிக்குப் பாதை கிடையாது,

தொழிலாள வர்க்கத்தினதும், கிராமப்புற ஏழை விவசாயிகளதும், தமிழ் ஈழம் தேசிய இனத்தினதும் போராட்டம், முதலாளித்துவத்தின் தாக்குதலுக்குள்ளாகி அதற்கு எதிராக வளர்ச்சி கண்டுவரும் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டமாகப் புறநிலை ரீதியில் ஒன்றுபட்டுள்ளது. துரோகத் தொழிலாளர் தலைவர்கள் முக்கியமாகவும், குட்டி முதலாளித்துவ தலைவர்கள் இவர்களுடன் இணைந்தும் செயற்படுவதன் மூலம் முதலாளித்துவ அரசுடன் சமரசத்துக்கு செல்வதன் மூலம் ஒருவரை மற்றவருக்கு எதிராகத் தூண்டி விடவும், தனிமைப்படுத்தவும் செய்வதன் மூலம் முதலாளி வர்க்கத்தினைக் காப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

அனைத்துலகச் சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தினைக் கொண்ட தொழிலாளர் வர்க்க தலைமையின் கீழ், தமிழ் சிறுபான்மை தேசிய இனத்தினரினதும் அவ்வாறே கிராமப்புற ஏழைகளதும் போராட்டங்களை ஐக்கியப்படுத்துவதன் மூலமே இந்தக் காட்டிக் கொடுப்புக்களுக்கு முடிவு கட்ட முடியும். தமிழ் விடுதலைப் போராட்டம், முழு இந்தியத் துணைக் கண்டத்திலும், உலகம் பூராவும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுடன் நனவான ஐக்கியத்தினை உண்டுபண்ணுவதற்கான ஒரே வழி, அதன் நனவு பூர்வமான தலைமையாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தைக் கட்டி எழுப்புவதே.

— முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத யுத்தத்துக்கும் கிராமப்புற...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

## முக்கிய யுத்தம்

இந்நிலைமையில் தான் முதலாளித்துவ யூ. என். பி — சி. ல. சு. க. கட்சிகளுள் நாய்ச்சண்டையும் போட்டா போட்டியும் தீவிரமடைந்துள்ளது. ஒடுக்கப்படுவோரை கொடிய முறையில் அடக்கி, ஏகாதிபத்தியவாதிகளின் வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்த வல்லமை கொண்டவர் யார்? எந்த முதலாளித்துவ கும்பல் எந்த ஏகாதிபத்தியவாதியின் பின்சென்று எச்சில் பிச்சைக்கு கையேந்துவது என்பதே பிரச்சினை. தமிழர் விரோத இனவாதத்தை தூண்டிவிடுவது அவர்களின் முக்கிய ஆயுதமாக விளங்குகிறது. வேலையற்ற இளைஞரை இராணுவ முகாம்களில் தள்ளி கடந்த ஆண்டில் 2530 பேரை மரணத்துக்கு பலியிட்டுள்ளதுடன் கடந்த ஓரிரு மாதங்களுள் 500 க்கு அதிகமானோரை போர் முனையில் இறக்கச் செய்ய பிரேமதாச அரசாங்கம் யுத்தத்தை தீவிரமாக்கியும், கிராமப்புறப் படுகொலைகளை தீவிரமாக்கியும் தனது ஆட்சியை பேணும் முயற்சியில் பேய்த்தனமாக ஈடுபட்டுள்ளது.

## சுயாதீனமாக போராட்டத்தில் குதிக்க வேண்டும்

தொழிலாள வர்க்கம் உடன் செயற்படவேண்டும். ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ கும்பலின் பின் அணிதிரண்டுள்ள சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ, இ. தொ. கா. தலைமைகளது துரோக பிற்போக்கு ஏகாதிபத்திய சார்பு வேலைத்திட்டங்களை வெறுத்து ஒதுக்க வேண்டும். சிங்கள, தமிழ் தேசிய இனங்களை சேர்ந்த தொழிலாளர் ஒருங்கிணைந்து ஒடுக்கப்பட்ட விவசாயிகள் இளைஞர்களையும் ஒடுக்கப்படும் ஏனைய மக்களையும் தம்மை சூழ அணிதிரட்டும் வேலைத்திட்டங்களின் மீது முதலாளித்துவ கட்சிகளிடமிருந்தும் விலகி, சுயாதீனமான போராட்டத்திலிறங்கவேண்டும். வடக்கு— கிழக்குத் தமிழ் மக்களின் சனநாயக உரிமை, சுயநிர்ணய உரிமை என்பவற்றை தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே நிலைநாட்ட முடியும். வடக்கு — கிழக்கிலிருந்தும் இலங்கை முதலாளித்துவப் படைகளை வாபஸ் பெற செய்யவேண்டும் தமிழின ஒடுக்கப்பட்ட மக்கள், தொழிலாள வர்க்கதிடையேயும் சிங்கள தொழிலாள, ஒடுக்கப்பட்ட மக்களிடையேயும் சனநாயக ரீதியிலான உறவை நிலைநாட்டவேண்டும். அதனை சாதிக்க தொழிலாளரும் ஒடுக்கப்படுவோரும் ஒருங்கிணைந்து ஏகாதிபத்திய ஒடுக்கு முறையையும், அதனை நடத்தும் முதலாளித்துவ ஆட்சியையும் அகற்றிவிட வேண்டும். இதற்கான செயற்திட்டமாக இலங்கை — தமிழ்ஈழம் சோசலிச குடியரசு ஒன்றை கட்டியெழுப்பும் செயற்திட்டம் விளங்குகிறது.

சகல தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ குழுக்கள் பிரேமதாச அரசாங்கத்தின் கூலிப்படைகளாகவும், யுத்த கூச்சலிடும் முதலாளித்துவக் கட்சிகளின் கூட்டணிகளாகவும் மாறியுள்ளன. அத்துடன் விடுதலைப் புலிகள் தலைமைகள் போராளிகளையும், தமிழ் ஒடுக்கப்படும் மக்களையும் காட்டிக் கொடுத்து ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் முதலாளித்துவ ஆட்சியைத் திணிக்க முயற்சிக்கின்றன. இலங்கை இராணுவத்துடன் விடுதலைப் புலிகள் போராளிகளின் மோதுதல் தொடங்கும் நிலையிலும் விடுதலைப் புலிகள் முதலாளித்துவ தலைமையின் இக் காட்டிக் கொடுப்பு, தமிழ் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களது தேசிய புரட்சிகர போராட்டத்தை பேராபத்துக்குள்ளாக்குவதோடு பல வீனமடையவும் செய்கிறது. இந்திய முதலாளிகளுடன் இத் தலைமைகள் நடத்தும் சந்தர்ப்பவாத தொடர்புகள் தமிழ் ஒடுக்கப்படும் மக்களது போராட்டத்தை இந்திய உபகண்ட தொழிலாளரிடமிருந்தும் அந்நியப்படுத்தி, தனிமைப்படுத்துகின்றது. இந்திய, இலங்கை தொழிலாளிகளுடன் ஐக்கியத்தை நிலைநாட்டும் புரட்சிகர வேலைத்திட்டத்தின் மீது அணிதிரள்வதே இன்று தமிழ் ஒடுக்கப்படுவோருக்குள்ள ஒரேயொரு வேலைத்திட்டமாகும்:

## பெரும் பொறுப்ப

இலங்கையில் சிங்கள மொழி பேசும் தொழிலாளரிடம் பெரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்விரோத இனவாதத்தை தூண்டும் முதலாளிகள், அவர்களின் ஏஜந்துகளான துரோக தலைமைகளுக்கு எதிராக தமிழ் ஒடுக்கப்படும் மக்களை காக்க கிளர்ந்து எழவேண்டும். ஸ்டாலினிச கம்யூனிச, சமசமாஜ, நவசமசமாஜ கட்சிகளது துரோக தலைமைகள், தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டவும், யுத்தத்திற்கு ஆதரவு வழங்கவும் முன்வந்துள்ளன. நவசமசமாஜ கட்சியின் மத்தியவாத சந்தர்ப்பவாதிகள் 1991 ஒக்டோபர் 18ம் திகதி தமது 'ஹரய' பத்திரிகையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்: ''அவசரகால சட்டம் அமுலிலிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி இன்று வடக்கு யுத்தத்திற்கு தடையில்லை. ஏனெனில் அது இன்று தேசிய யுத்தம் என்ற முறையில் நடத்தப்படுவதாலாகும்'' (ஹரய அரசியல் நிருபரின் கட்டுரை) தமிழ் ஒடுக்கப்படும் மக்களை அடக்கும் யுத்தத்தை ''தேசிய யுத்தமென'' பெயரிட்டு, ''சிங்கள மக்களை அடக்குவதற்கு எதிராக'' எனக்கூறி இத்துரோக தலைமைகள் நடத்தி வரும் காட்டிக்கொடுப்பு சிங்கள இனத்தை காப்பது பற்றிய முதலாளிகளின் பச்சைப்படியான மோசடியின் மறுபிரதி மட்டுமே. வடக்கு, கிழக்கில் கொன்று குவிக்கப்படுவோர் இலங்கை தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படுவோரினதும் சகோதர தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களே. இந்த யுத்தம் எமது யுத்தம் அல்ல. ஒரு சதமோ ஒரு கருவியோ, ஒரு மனிதனோ வழங்கமாட்டோம்! என தொழிலாள வர்க்கம் பிரச்சாரத்தில் இறங்கி அனைத்துலகவாத பதாகையை உயர்த்த வேண்டும்.

## தொழிலாள வர்க்கத்தால் மட்டுமே தீர்த்து வைக்க முடியும்

கிராமப்புற ஏழை விவசாயிகளது விவசாய பிரச்சினையைத் தீர்க்கவும் அவர்களுக்கெதிராக கட்டவிழ்க்கபட்டுள்ள கொடிய அடக்குமுறையை நிறுத்தவும் தொழிலாள வர்க்கம் தலையிடவேண்டும். கிராமப்புற விவசாயிகளது நிலமில்லாப் பிரச்சினை, பன்னாட்டு கம்பெனிகள், வங்கியாளரது கொள்ளை அடிப்பு, தரகர்களின் சுரண்டல் போன்ற விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் தலைமையை தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே வழங்குவது சாத்தியம். கிராமப்புற இளைஞர்களை இலட்சக்கணக்கில் கொல்வதும் வறுமை உட்பட்ட சமூக பிரச்சனையினால் எழுச்சியுற்றுள்ள கிராமப்புற வறியவர்களை அடக்குவதுமட்டுமல்ல தொழிலாள வர்க்கத்தை தனிமைப்படுத்தி, தாக்குவதும் முதலாளித்துவ வர்க்கத்தின் கைவசமுள்ள உபாயமாகும். முதலாளித்துவக் கட்சிகளிலிருந்து சுயாதீனமாக அணிதிரண்டு, கிராமப்புற ஏழைகளின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வேலைத்திட்டத்தினை முன்வைப்பதன் மூலம் மட்டுமே தொழிலாள வர்க்கத்தினால் கிராமப்புற ஏழைகளுக்கு தலைமை தாங்கவும், அணிதிரட்டவும முடியும். இந்த வேலைத்திட்டம், ஏகாதிபத்தியப் பிடியை உடைப்பதையும், முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் — பொருளாதார பலத்தினை ஒழிப்பதனையும் இலக்காகக் கொண்டது. அதாவது: யூ. என். பி, அரசாங்கத்தினை வெளியேற்றி; சகல அடிப்படை முதலாளித்துவக் கைத்தொழில்களையும் - நிறுவனங்களையும் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கும் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணரும் வேலைத்திட்டம். இலங்கை— தமிழ்ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம்.

இவ்வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பிரேமதாச அரசாங்கத்தின் இனவாத யுத்தம், கிராமப்புற படுகொலைகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கம் தனது கைத்தொழில், அரசியல் சக்தியை அணிதிரட்ட வேண்டுமென புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கோருகின்றது.

சகல தொழிலாள வர்க்க அமைப்புகள், ஸ்தாபன ரீதியில் அணிதிரளாத பகுதிகளில் வேலைத்தல குழுக்களை நிறுவி அவற்றினதும் கிராமப்புற விவசாயிகளது அமைப்புகளை நிறுவி அவற்றினதும், வடக்கு – கிழக்கு போராளிகளினதும் பிரதிநிதிகளதும் பேராளர் மகாநாட்டை கூட்ட போராடுமாறு சகல தொழிலாளர், ஒடுக்கப்படுவோரையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் இளைஞர் அமைப்பான 'இளம்சோசலிஸ்டு' களும் வேண்டுகின்றன. வடக்கு — கிழக்கு இனவாத யுத்தத்தை நிறுத்து! இலங்கைபடைகளை வாபஸ்பெறு! தமிழ் தேசிய இனத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டு! கிராமப்புறபடுகொலைகளை நிறுத்து! அரசியல் கைதிகளை விடுதலை செய்! உலகவங்கி— யூ. என். பி. தாக்குதலை தோற்கடி! என்ற கோரிக்கைகளின் பேரில் ஒடுக்கப்படுவோரது ஆதரவை பெற்ற பொதுவேலை நிறுத்தமொன்றை தயாரிக்க இந்த பிரதிநிதிகள் மகாநாடு தீர்மானம் செய்ய வேண்டும் என புரட்சி கம்யூனிஸ்ட் கழகமும் அதன் இளைஞர் அமைப்பும் கூறுகின்றன. முதலாளித்துவ குண்டர் இயக்கம் அரசபடைகளிடமிருந்தும் பாதுகாப்புக்காக தொழிலாள — ஒடுக்கப்பட்டவர்கள் தமது வேலைத்தலங்கள் இல்லங்கள், கிராமப்புறங்களில் ஆயுதபாணிபாதுகாப்பு படைகளை கட்டியெழுப்ப செயற்பட வேண்டுமெனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் 'இளம் சோசலிஸ்டு' களும் கோருகின்றன.

சமசமாஜ, நவசமசமாஜ' கம்யூனிஸ்ட் கட்சிகள் இ. தொ. கா. தலைமைகள் முதலாளித்துவ பிரேமதாச அரசாங்கத்துடனும் ஏனைய முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதை நிறுத்தி, இப்பேராளர் மகாநாட்டினை கூட்ட வேண்டும் என கோருமாறு அக்கட்சிகள், தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்களை கோருகிறோம். மேற்கூறிய வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டுமென சகல தொழிற்சங்கங்களும், கிளைகளும் ஒடுக்கப்படுவோரது அமைப்புக்களும் தீர்மானங்கள் நிறைவேற்றி பலத்த பிரசாரத்தில் ஈடுபடவேண்டுமென நாம் சகல தொழிலாள - ஒடுக்கப்படுவோரை வேண்டுகின்றோம்.

இத்தலைவர்கள் தமது துரோக நடவடிக்கைகள் மூலமும் ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டத்தின் மூலமும் தொழிலாள வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டுவதைப் போலஆபத்தானதுவேறொன்றும்இல்லைஎன்பதைச்சுட்டிக் காட்டியுள்ளார்கள். இவர்கள் ஏகாதிபத்தியவாதிகளின் வேலைத்திட்டத்துக்கு வழி திறக்க முடிவு செய்துள்ளனர். இவர்கள் தொழிலாள வர்க்கத்துக்கு விதித்துள்ள தடைகளை எல்லாம் முறியடித்து, தொழிலாளர் அமைப்புக்கள் முதலாளித்துவகட்சிகளுக்குப் 'பந்தம்' பிடிப்பதற்கு எதிராகக் கிளர்ந்து எழுவதன் மூலம் இந்த தலைமைகளை துடைத்து எறிந்து புரட்சித் தலைமையை உறுதி செய்வதே தொழிலாள வர்க்கத்தினை கூணிதிரட்டுவதற்கான ஒரே வழியாகும். வட-கீழ் மாகாண தமிழ் பேசும் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் விடுதலைப் புலிகள் தலைமையின் பிற்போக்கு வேலைத்திட்டத்தினை நிராகரிப்பதோடு, புரட்சிகர மார்க்சிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தலைமையைக் கட்டி எழுப்ப இணைவது பெரும் அவசியமாகியுள்ளது.

இந்தப் புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே புரட்சிக்கட்சியைக் கட்டி எழுப்புகின்றது. ஏகாதிபத்தியத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக உலகப் பாட்டாளி வர்க்கத்தினை சகல நாடுகளிலும் அணிதிரட்டப்போராடுவதன் மூலம் புரட்சித் தலைமையை கட்டி எழுப்ப நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு போராடுகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்வதன் மூலம் இப்போராட்டத்தில் இறங்கலாம்.

## தொழிலாளர் பாதை

### சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

| | |
|---|---|
| 1 மாதம் — ரூ. 6.00 | 3 மாதம் ரூ...—. 12.00 |
| - மாதம் — ரூ. 36.00 | 1 வருடம் ...— ரூ. 72.00 |

பெயர்:..........................................

முகவரி :..........................................

சந்தா காலம் :..................ரூ............சதம்........

சந்தாப் பணத்திற்கான அஞ்சல் அல்லது காசு கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய

முகவரி:

நிர்வாகி,
''தொழிலாளர் பாதை''
இல. 90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10

கொழும்பு — 10,1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை இலக்கம் 90ல், வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org